மீண்டும் உவர்மலையில்
குருஷேஸ்த்ரா
கல்வி நிலையம்
அனுமதிகள் 20.11.2012 ல்
இல. 42 மத்தியவீதி,
உவர்மலை

கார்த்திகை மாதம் 17ம் திகதி

December 02, 2012

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 19

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 பக்கங்கள் – 10 பிரதி ஞாயிறு தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தேசிய அடையாள அட்டைகள் அவசியம்

நடைபெற இருக்கின்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் பரீட்சாத்திகள் தேசிய அடையாள அட்டையை கொண்டிருப்பது அவசியம் என இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி 7ம் பக்கத்தில்

## மாவட்டம் முழுவதும் மூன்று தின இரவுகளில் கடும் பாதுகாப்புப் பணியில் படையினர்

கடந்த 25, 26, 27 ஆகிய மூன்று திகதிகளிலும் இரவு நேரங்களில் மாவட்டம் முழுவதும் வீதிகளில் பெருமளவு காவல் துறையினரும், இராணுவத்தினரும் கண்காணிப்பு மற்றும் ரோந்துப் பணிகளில்

தொடர்ச்சி 7ம் பக்கத்தில்

## தேர்தல் முடிந்து மாதங்களான பின்னும் கொடுப்பனவுகள் கிடைப்பதில் தாமதம்

நடந்து முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தேர்தல் பணிகளில் ஈடுபட்ட ஆசிரியர்களிற் பெருந்தொகையானவர்களுக்கு தேர்தல் கடமைக் கொடுப்பனவுகள் இன்னமும் திருக்கோணமலை வலயக் கல்விப்

தொடர்ச்சி 7ம் பக்கத்தில்

## இலஞ்சத்தில் கைதாகியதில் அனேகர் காவல் துறையைச் சேர்ந்தவர்களே! இலஞ்ச ஆணைக்குழு

இவ்வருடத்தில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட இலஞ்சம் தொடர்பான சுற்றிவளைப்புக்களில் கைது செய்யப்பட்ட 84 அரச மற்றும் அரசியல் வாதிகளில் 22 பேர் காவல்துறையைச்

தொடர்ச்சி 7ம் பக்கத்தில்

வழிகாட்டலில் எதிர்வரும்
26.11.2012 (திங்கள்)
மாலை 3.00 மணிக்கு
திருமலை நகரில்
மாபெரும் கல்விக்
கருத்தரங்கு....
வரலாறு பாடத்தில்
சிறந்த பெறுபேறு பெற
விரும்புகின்றீர்களா???
உங்கள் நகராட்சி மன்ற
மண்டபத்தில்
உங்கள் வரலாற்று ஆசிரியர்

# மதுபோதையில் மாணவர்கள்!!!! கருத்தரங்கில் கைகலப்பு

ஏற்பாட்டாளர்களா ?
கல்வித் திணைக்களமா?
பெற்றோரா?
பாடசாலைகளின் நிர்வாகமா?

## பொறுப்புச் சொல்லப் போவது யார் ?

நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கல்விக் கருத்தரங்கில் பங்குபற்றிய திருக்கோணமலை நகரின் பிரபல பாடசாலை மாணவர்களிடையே ஏற்பட்ட கைகலப்பைத் தொடர்ந்து போக்குவரத்துக் காவல்துறையினரின் தலையீட்டில் நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார். புத்தகங்களை இரவல் வழங்கும் பிரிவிற்கு வருகை தந்திருந்த எமது செய்தியாளர் அங்கு நிகழ்ந்தவற்றை முழுவதுமாக பதிவுசெய்துள்ளார். அந் நேரத்தில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவசக் கல்விக் கருத்தரங்கொன்றை ஏற்பாட்டாளர் ஒருவரின் வழிகாட்டலுக்கு அமைய பிரபல ஆசிரியர் ஒருவர் இலவசமாக 29.11.2012ல் நகரசபைக் கட்டிடத் தொகுதியில் ஏற்பாடு செய்திருந்தார். தனது சுயமுயற்சியில் பெரும் சிரமத்திற்கு மத்தியில் மாணவர்களின் நல்வாழ்வுக்காக பலநாட்களாகத் தனது நித்திரையையும் இழந்து ஏற்பாடு செய்திருந்த இக் கருத்தரங்கிற்குப் பிரபல நகரப் பாடசாலைகளின் மாணவ மாணவிகள் வருகை தந்திருந்தனர். எனினும் பிரபல பாடசாலை மாணவர்களிடையே ஏற்கனவே நிலவிய கருத்து முரண்பாட்டை அடித்துத் தணித்துக் கொள்ளும் முடிவுடன் சில மாணவர்கள் மதுவருந்திவிட்டு இக் கருத்தரங்கிற்கு வருகை தந்திருந்தனர். அத்துடன் க.பொ.த உயர்தர மாணவர்கள் சிலரும் அத்திட்டத்திற்கு உதவும் நோக்குடன் இக் கருத்தரங்கில் பங்குபெற வந்திருந்ததாக அங்கிருந்த

(7ம் பக்கம் பார்க்க)

## அதிரடியில் நகரசபை

அனுமதித் தகடின்றித் திரியும் உந்துருளிகளுக்கான அனுமதித் தகட்டை வழங்க திருமலை நகரசபை எடுத்த அதிரடி நடவடிக்கை பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

(7ம் பக்கம் பார்க்க)



## தேசிய விருதை வென்றார் சா. சபேசினி



இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு நடாத்திய 'சஹசக் நிமவும்' புத்தாக்கக் கண்காட்சியில் திருகோணமலை மெதடிஸ்த கல்லூரி மாணவி சபேசினி சாந்தசிவம் தேசிய விருதைப் பெற்றுள்ளார்.

2012ம் ஆண்டுக்கான புத்தாக்க கண்காட்சியில் 'உறிஞ்சல்மானி' என்ற விஞ்ஞான உபகரணத்தை வடிவமைத்து பாடசாலை, வலய, மாவட்ட மற்றும் மாகாண ரீதியில் வெற்றிகளை பெற்று தேசிய ரீதியிலும் விருதைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

(7ம் பக்கம் பார்க்க)

ஞாயிறு தரிசனம்
அலைவரிசையில்
மாலை 6 மணி - இரவு 8.30 மணி
சன் கேபிளில் 16வது அலைவரிசை
SVC அலைவரிசையில் சட்லைட் கேபிள் விசனில்
**வணக்கம் தரிசனத்தில்:**
வடகிழக்கின் சர்வோதய இணைப்பாளர் திரு.ஜீவராஜ் உடன் நேர்காணல்
**சகோதர மொழி கலாசார நிகழ்வு**
**சிறுவர் கலை மற்றும் நகைச்சுவை விருந்து**
**ஆனந்தரமணனின் குறுந்திரைப் படங்கள்**
- தேவை
- அவன் பேசமாட்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

**மதுவுக்கடிமையாகும் சிறுவர்கள்**

பாடசாலை மாணவர்கள் மதுவுக்கு அடிமையாவதைப் பற்றிப் பலதடவைகள் மலைமுரசு தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டிருந்தது. மதுவின் தாக்கங்களையும் தமிழ் சமூகத்தின் எதிர்கால நிலை தொடர்பாகவும் மலைமுரசு தனது இயங்கியல் நிலைப்பாட்டை மேலும் உறுதியாக்கும் சந்தர்ப்பமொன்றாக 29.11.2012ல் நிகழ்ந்த கருத்தரங்கில் மாணவர்கள் நடாந்துகொண்ட விதத்தை கருத்திற்கொள்கின்றது.

பாடசாலை மாணவர்களுக்கிடையிலான முரண்பாடுகளை மதுவருந்தி விட்டு அடித்துத் தணித்துக்கொள்ளும் நடவடிக்கையில் மாணவர்கள் ஈடுபடுவதை அனுமதிப்பது யார்? என்பதும் அதற்கான பொறுப்பைக் கூற வேண்டியவர்கள் யாரென்பதும் இங்கு கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

சிறந்த கல்விச் சமூகத்தைக் கொண்டுள்ள திருமலையில் சீரழியும் மாணவர்களைத் தட்டிக் கேட்கத் தயாரற்ற நிலை காணப்படுகின்றது. இதனை நிவர்த்திக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனச் சிந்திப்பது யார்? முன்னாள் கல்விச் செயலாளரை அரசியல் தலைவராகக் கொண்டுள்ள இம்மாவட்டத்தில் கல்விச் சமூகச் சீரழிவினை தடுக்கும் நடவடிக்கைகளை யார் முன்னெடுப்பது என்பதே கேள்விக்குறியாகியுள்ளது.

இவ்விடயத்தை மூடிமறைத்து விடுதலே பிரதானம் எனப் பலரும் எண்ணம் கொண்டுள்ளனர். எமது பத்திரிகையில் இவ்விடயம் வெளிவருவது நல்லதல்ல என்னும் எண்ணங்கொண்ட அறிவாளர்கள் (?) பலர் இங்குள்ளனர். ஆனால் இவ்வளவு காலமும் மூடிமறைத்து வைத்திருந்ததால் தான் நிலைமை கட்டுக்கடங்காமற் போய்விட்டது என்பதை அனைவரும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

மாணவர்களின் இந் நிலையின் பிரதான பங்கை ஏற்க வேண்டியவர்கள் பெற்றோரே. தமது குழந்தைகளின் மீது நேரடியான கண்காணிப்பைக் கொண்டிருக்காமையால் தான் இவ்வாறு ஏற்பட்டுள்ளது. அளவிற்கதிகமான பணப் புழக்கமும், கட்டுப்பாடற்ற அன்பும் மாணவர்களை தவறான வழியில் செலுத்த முனைகின்றது. மாணவர்கள் எங்கு செல்கின்றார்கள் எத்தனை மணிக்குச் செல்கின்றார்கள், எத்தனை மணிக்கு அவர்களது வகுப்புக்கள் நிறைவடைகின்றன, மாலையில் எத்தனை மணிக்குத் திரும்பி வருகின்றார்கள் போன்ற கண்காணிப்புக்கள் எவையுமில்லாத மாணவர்களைத் தறுதலைகளாக உருவாக்குவதற்கு பணம் என்ற அச்சில் இயங்கும் பொருளாதார உலகம் தயாராகவே பல கவர்ச்சிகரமான விடயங்களைக் கொண்டிருக்கின்றது.

மாணவர்களுக்கு மதுப் பொருட்களை விற்கக் கூடாது என்னும் பொறுப்புணர்வை எந்த மதுக்கடை உரிமையாளனும் கொண்டிருப்பதாக தெரியவில்லை. பணம் என்னும் வெற்றுத்தாள் பரிமாற்றப்படுமாயின் எந்த நிபந்தனைகளுமின்றி போதைப் பொருட்களை வழங்கப் பலர் இருக்கின்றார்கள்.

எனவே பெற்றோரே! உங்களது குழந்தையின் மீது கடுமையான கண்காணிப்பை வைத்திருங்கள். திருமலையின் கல்விச்சமூகம் என்ன செய்யப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.....

-ஆசிரியர்-

## திருக்கோணமலை வலயக்கல்வி மட்ட உலக ஆசிரியர் தினம்




திருக்கோணமலை வலயகல்வி அலுவலகத்தினால் ஆசிரியர் மத்திய நிலையத்திற்கூடாக வருடாந்தம் நடாத்தப்படும் உலக ஆசிரியர் தினப்போட்டிகள் இவ்வருடமும் நடாத்தப்பட்டது. இப்போட்டிகளைத் தொடர்ந்து எதிர்வரும் 03/12/2012 மாலை 3.00 மணிக்கு தி/புனித சூசையப்பர் கல்லூரியில் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.N.விஜேந்திரன் அவர்களின் தலைமையில் ஆசிரியர் தின நிகழ்வும், பரிசளிப்பும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.A.M.E போல் அவர்களும். கௌரவ விருந்தினர்களாக திரு.S.பாக்கியராஜா, (தலைவர், தேசிய கல்வியியற் கல்லூரி, மட்டக்களப்பு) அவர்களும், திருமதி. C.B.T.குமாரிஹாமி, பிரதிக் கல்விப் பணிபாளர், மாகாணக் கல்வித் திணைக்களம் அவர்களும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

## டெங்கு நுளம்பொழிப்பு நடவடிக்கை



திருக்கோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக அரசடி கிராம சேவையாளர் பிரிவில் கண்காணிப்பு நடவடிக்கைகள் 28.11.2012 அன்று நடைபெற்றன.

இதன் போது அரசடி கிராம சேவையாளர் திருமதி.S.சௌந்தர ராஜா, பொது மக்கள் பாதுகாப்புக் குழு பொறுப்பதிகாரி I.P.நிஹார் மற்றும் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள், பொது சுகாதார பரிசோதகர் ரஞ்சன், சமாதான நீதவான் அசனார் மற்றும் சில சுத்திகரிப்பு பணியாளர்களும் வீடுகள் தோறும் சென்று கண்காணிப்பில் ஈடுபட்டதுடன் டெங்கு ஒழிப்பு அறிவுறுத்தல்களடங்கிய துண்டுப் பிரசுரங்களையும் மக்களுக்கு வழங்கினர்.

இது குறித்து கிராம சேவையாளர் திருமதி.S.சௌந்தரராஜா மலை முரசிற்கு தெரிவிக்கையில், இக்கண்காணிப்பு நடவடிக்கைகள் ஏறத்தாழ 25 வீடுகளில் மேற்கொள்ளப்பட்டதாகவும் அதில் டெங்கு பரவுவதற்கு ஏதுவான சூழல் கொண்ட 3 வீடுகள் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அவ்வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.






VEAL MONTESSORI
(INTERNATIONAL)இன்
2012ன் வருடாந்த கலை நிகழ்வு
"VICTORS OF VEAL"
கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில்
09.12.2012ல் காலை 8.30மணிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
VEAL MONTESSORI
(INTERNATIONAL)
DEEP WIDE & SHARP KNOWLEDGE


## வெளியிடப்பட்டுள்ளது
## □ நீங்களும் எழுதலாம் □
### 23வது கவிதை இதழ்




"மனித உணர்வுகளைப் பொதுமைப் படுத்தி மானுடம் ஒன்றுபட்டுச் செழிப்புறும் வண்ணம் எழுதுங்கள்" என்ற நீங்களும் எழுதலாம் இருமாத கவிதை இதழின் ஆசிரியர் எஸ். ஆர். தனபாலசிங்கத்தின் தந்திரம் தொடங்கி அவதந்திரம் வரையிலான விளக்க முன்னுரையோடு வெளிவந்துள்ளது 2012 புரட்டாதி - ஐப்பசி மாதத்திற்கான நீங்களும் எழுதலாம் கவிதை இதழ்.

கடந்த நான்கு வருடங்களாக திருமலையில் இருந்து வெளியாகும் "நீங்களும் எழுதலாம்" கவிதைக்காக தன்னுள் பல்வேறு களங்களை திறந்து வைத்துள்ளது. புதியவர்களை இணைத்தலும் பழையவர்களைப் பேணலுமாக சமநிலைத் தன்மையில் இயங்கி வரும் நீங்களும் எழுதலாம், புதிய தலைமுறை இலக்கிய வாதிகளை தேடிக்கண்டு கொள்தல் மட்டுமல்லாது பௌர்ணமி தின கவியரங்க நிகழ்வொன்றையும் விடாது அரங்கேற்றி வரும் இலக்கிய அமைப்பாகும்.

தனி மரம் தோப்பாகாதென்ற கருத்தாக்கங்களைத் தாண்டி தனி மனித முயற்சியின் பயனாக மிளிரும் நீங்களும் எழுதலாம் இதழ் 23 கேள்விக் குறியாகி நிற்கும் நீதித்துறையின் எதிர்காலத்தை வேண்டியதான அட்டைப்படத்துடன் வெளிவந்துள்ளது. இருபத்து மூன்று படைப்பாளிகளின் படைப்புக்களும், சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் சின்னையா குருநாதனின் பாராட்டு நிகழ்வு, அஷ்ரபா நூர்தீனின் "ஆகக் குறைந்த பட்சம்" கவிதை நூல் வெளியீட்டு விழா மற்றும் சேனையூர் அச்சுதனின் "எங்களையும் இந்த மண்ணில் மனிதராக வாழ விடுங்கள்" கட்டுரை நூல் வெளியீட்டு விழா ஆகியவற்றின் பதிவுகளும் வதிரி. சீ. ரவீந்திரனின் "மீண்டு வந்த நாட்கள்" கவிதைத் தொகுதியின் அறிமுகக் குறிப்பும், கொற்றை பி. கிருஷ்ணானந்தனின் "இன்னுமோர் உலகம்" மற்றும் அநாதரட்சகனின் நிமிர்வு ஆகிய சிறுகதைத் தொகுப்புக்களின் அறிமுகம் என்பவற்றோடு நீங்களும் எழுதலாமின் பௌர்ணமி தின நிகழ்வுகளின் பதிவுகளும் இடம்பெற்றிருக்கின்றன.

(தில்லைநாதன் பவித்திரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த வாரத் தொடர்ச்சி......

பிரேம்ஜி போன்றவர்கள் சுதந்திரன் ஆசிரியர் குழுவில் இருந்தனர். காலஞ்சென்ற எஸ்.ரி.சிவநாயகம் சுதந்திரன் பிரதம ஆசிரியராக இருந்தார். பின்னர் அவர் தமிழரசுக் கட்சியிலிருந்து பிரிந்து சென்றார். பிற்காலத்தில் M.D.குணசேன நிறுவனத்தின் "தினபதி" பத்திரிகைக்கு அவர் ஆசிரியரானார். சிந்தாமணிப் பத்திரிகைக்கு (தினபதியின் வாரமலர்) இராஜா ஆரியரத்தினம் ஆசிரியரானார். இவையெல்லாம் அறுபதுகளின் பிற்கூற்றில் நிகழ்கிறது. 1959ல் ஈழநாடு ஆரம்பிக்கப்பட்டது. அதன் வருகைக்கும் விற்பனைக்கும் சாதகமாக "கோகிலாம்பாள் கொலை வழக்கு'' செய்திகள் உதவின. கோகிலாம்பாள் வேறு இருவருடன் சேர்ந்து தனது கணவரை கொலை செய்த வழக்கு. இது பத்திரிகைகளில் இப்படியாகப் பிரசுரமாகாது விடினும் கோகிலாம்பாள் கொலை வழக்கெனப் பேசப்பட்டது. இக் கோகிலாம்பாளுக்காக நீதிமன்றில் வாதிட்டவர் தளபதி அ.அமிர்தலிங்கம். வாதாட்டம் தோல்வியுற்றது. கோகிலாம்பாள் சிறையிலிடப்பட்டார். இதனால் கோகிலாம்பாள் புகழ் அமிர்தலிங்கம் என அமிர்தலிங்கம் கிண்டலாகப் பேசப்பட்டார். 'அந்தனி சில்' என்று ஒரு பத்திரிக்கையாளர், அவர் இந்தியாவில்



-நந்தினி சேவியர்-

பெரியாரின் 'நாஸ்திகம்' பத்திரிகையில் கடமையாற்றி இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டிருந்தார். அவர் 'தீப்பொறி' எனும் ஒரு பத்திரிகையை ஆரம்பித்தார். டி..ராஜேந்தர் பாணியில் அவரது தலையங்கங்கள் அமையும். ஒரு தீவிர இடது சாரியாக அவர் தன்னைக் காட்டிக் கொண்டார்.

தளபதி அமிர்தலிங்கத்தை தள(ர்)பதி அமிர்தலிங்கம் என்றும் பாதர் செல்வநாயகத்தை பதர் செல்வநாயகம் என்றும் தீப்பொறியில் எழுதினார். யாருக்கும் கட்டுப்படாத ஏதேச் சாதிகார எழுத்தாளராக அவர் இருந்தார். தன் சொந்தச் செலவில் 'தீப்பொறியை' நடாத்திக் கொண்டிருந்தார். பிற்காலத்தில் 90 களில் தீவிர தமிழ் பற்றாளராக மாறி மட்டக்களப்பில் காலமாகினார். மலையகத்தில் சிறிது காலம் இருந்து 'ஒரு தீப்பொறி' என ஒரு பத்திரிகையை வெளியிட்டார். உண்மையில் பத்திரிகை வரலாற்றில் அந்தனி சில் ஒரு கலகக்காரனாகவே பயணித்தவர். அவரது கொள்கைகள் பேச்சுக்கள் எங்கள் கட்சியை சங்கடத்திலாழ்த்தியதும் உண்டு. அவர் நமது கட்சியின் அனுதாபியே தவிர கட்சி உறுப்பினர் அல்ல.

ஈழ நாடு பத்திரிகை தன் காலத்தில் பல சிரமங்களை அனுபவித்தது. தினகரன், சிந்தாமணி, வீரகேசரிக்கு படைப்புகள் அனுப்பினால் பிரசுரமாகும் படைப்புகளுக்கு சன்மானம் கிடைக்கும். எனது சிறுகதைகளுக்கு ரூபா 25 க்கு காசோலை அனுப்புவார்கள். ஆனால் சுதந்திரன், ஈழநாடு பத்திரிகைகள் சன்மானம் தருவதில்லை. அதே நேரம் படைப்பு பிரசுரமான பத்திரிகையை எமக்கு அனுப்புவதுமில்லை.

மதிப்பிற்குரிய நந்தினி சேவியர் அவர்கள் உடனலக்குறைவினால் அவதியுறுவதால் அவரது இந்த **நாடோடியின் பயணம்** சில வாரங்களுக்கு வெளிவராது என்பதை வருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

புத்துணர்ச்சியுடன் புதிய பயணத்தை அவர் தொடர்வார்...... நிச்சயமாக....

ஆசிரியர்






## கவிதைப் புத்தக வெளியீட்டின் போதான புகைப்படங்கள்



தி. பவித்ரன்



அறிமுக உரை- பெரிய ஐங்கரன்



முதற்பிரதி பெறும் பெற்றோர்



நயப்புரை- மாயன்

# கடல் தின்ற நம் நிலம் - 7

**கா .செந்தூரன்**

சென்ற வாரம் அறிவியல் மற்றும் மொழி ரீதியாக ஈழம் உட்பட குமரிக்கண்ட நாடுகளின் தொடர்பை தேடிச் சென்றோம். வாருங்கள் இவ்வாரம் குமரிக்கண்டம் தொடர்பான சில சுவாரசியமான தகவல்களை தேடிப் பயணிப்போம்...

ஒரு ஆராயச்சி சொல்கிறது குமரிக்கண்டத்தில் வாழ்ந்தவர்களின் சந்ததிகளுக்கு மட்டுமே ஒரு உயரமான இடத்தில் இருந்து கீழே விழுவது போன்று கனவு அவர்களுடைய வாழ்நாட்களில் கடைசி ஒருதடவையேனும் வருமாம். உங்களுக்கு அப்படியான கனவு வந்திருக்கிறதா தோழர்களே.....?

வந்திருக்கிறதா?......ம்ம்ம் ...அப்படி என்றால் நீங்களும் தமிழர்தான்!

இக்காரணத்தை பல வரலாற்று ஆய்வாளர்கள் மறுத்தும் , ஆதரித்தும் கருத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். ஆனாலும் இக்கனவு காணும் நபர்கள் குமரிக்கண்டம் இருந்ததாக சொல்லப்படும் பகுதியில் மட்டும்தான் காணப்படுகின்றனர். சரி இக்கனவு வருவதற்கு அப்படி என்ன காரணம் இருக்கும்? இதற்கு சில குமரிக்கண்ட ஆய்வாளர்கள் இப்படி பதிலளிக்கிறார்கள் . குமரிக்கண்டத்தின் இறுதிக்காலத்தில் பாரிய ஆழிப்பேரலை மற்றும் நிலநடுக்கங்கள் ஏற்படும்-போது உயரமான பகுதியில் இருந்து மக்கள் விழுந்து இருக்கலாம் எனவும் ,அப்படி விழுந்து தப்பித்தவர்களின் மூளையில் பதிந்த அச் சம்பவம் மரபணுக்கள் மூலமாக சந்ததிகளுக்கு கடத்தப்படுகிறது என்றும் சொல்கிறார்கள் . அப்படிக் கடத்தப்பட்ட மரபணுக்களின் தாக்கம் காரணமாகவே இவ்வாறு கனவு வருவதாக சொல்லிகிறார்கள் .

இன்னுமொரு தகவல் கொஞ்ச காலத்துக்கு முன்பு பரபரப்பாக பேசப்பட்டு வந்தது . ''பொரிக்ஷாஜீ'' எனும் ரஷ்ய சிறுவன், தனக்கு முன்ஜென்ம நினைவுகள் வந்து விட்டதாகவும் தான் ஒரு காலத்தில் செவ்வாய் கிரகத்தில் வாழ்ந்ததாகவும் அப்போது அடிக்கடி தான் பூமிக்கு வந்து




போய் இருப்பதாகவும் பூமியில்குமரிக்கண்ட பகுதியில் அறிவில் மேம்பட்ட 9 அடி உயரம் கொண்ட மனிதர்கள் வாழ்ந்தார்கள் எனவும் கூறியுள்ளான்.

சிறுவனின் உண்மைத்தன்மை இன்னும் அறியப்படவில்லை. ஆனால் ஆரிய புத்தகங்களில் புராணங்களில் 9 அடி மனிதர்களை பற்றிப் பல பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தமிழர்கள் எப்போதும் ஆரியரின் புராணங்களில் அரக்கர்களாக சித்தரிக்கப்படுவது வழமைதானே ,,, ஒரு சின்ன உதாரணம் மகாவம்சத்தில் இயக்கரும் நாகரும் யட்சினிகள் ,ராமாயணத்தில் ராவணனும் அவனது கூட்டத்தாரும் அரக்கர்கள்)..

சில விடயங்கள் விளையாட்டாக தொடக்கி ந[illegible] அப்படித்தான் [illegible] பக்கங்களை கண்டு செல்கின்றது.

ஆங்கிலேயர்களையும், அமெரிக்கர்களையும் பற்றி வேடிக்கையாக ஒன்று சொல்வார்கள். இருவருமே தங்கள் முன்னோர்களைப் பற்றித்தான் எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டும், பேசிக் கொண்டும் இருப்பார்களாம். ஆனால் அதில் ஒரு வித்தியாசம் உண்டு. ஆங்கிலேயர்கள் தங்கள் முன்னோர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பது பற்றியே பேசுவார்களாம். என் தாத்தா இப்படி வாழ்ந்தார், அவருக்குத் தாத்தா அப்படி வாழ்ந்தார் என்று பேசியே பொழுதைக் கழிப்பார்களாம்.


ஆனால் அமெரிக்கனின் கதையே வேறு, என் தாத்தா யார், அவர் எங்கு வாழ்ந்தார், அவருக்குத் தாத்தா எப்படிப்பட்டவர் என்பதைத் தேடுவதிலேயே அவர்களுக்குப் பொழுது போய் விடுமாம். அதாவது அவர்களுக்குத் தங்கள் முன்னோர் யார், அவர்களது வம்சாவளி எது என்பதே தெரியாது.

ஏன் இதை சொன்னேன் என்றால் ...நமக்கெல்லாம் அந்த அவஸ்தை இல்லை. இன்றும் கூட கிராமப் புறங்களில் நம் மக்களிடம் உங்கள் பெயர் என்ன என்று கேட்டுப்பாருங்கள். இந்த ஊரைச் சேர்ந்த இன்னாருடைய மகன் இன்னான் என் பெயர் இது என்று ஒரு சிறு புராணமே பாடி விடுவார்கள். சங்கப் புலவர்கள் பெயரைப் [illegible]ர்கள் பெயரே ஊர் பெயரை [illegible] அல்லது இன்னார் மகன் என்று தந்தை பெயரை ஒட்டியோ அல்லது செய்யும் தொழிலை ஒட்டியோதான் இருக்கும். தனி மனிதன் தன் வம்சாவளியைத் தெரிந்து வைத்திருப்பது போல, நம் வரலாற்றை பல்லாயிரம் ஆண்டுகள் முன்பு வரை நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும்...

எல்லைக்கல் பகுதி நம் வரலாற்றை குமரிக்கண்டம் தொடக்கம் இருப்பதை உறுதி செய்துள்ளது. அதற்கு பின் வந்த இன்னும் அறியப்படாத வரலாற்றை இனிவரும் காலங்களில் தேடத் தொடங்குகிறது...

இதுவரை குமரிக்கண்டத்துடன் பயணித்தவர்களுக்கு நன்றி சொல்லி அதற்கு பின் வந்த கால வரலாறுகள் நோக்கி பயணிக்க இருக்கிறது எல்லைக்கல்

இன்னும் நடுவோம் .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த வாரத் தொடர்ச்சி

முத்தமிடுவதால் HIV வைரஸ் தொற்றுமா என்னும் கேள்வியுடன் கடந்த வாரம் எனது கட்டுரையை முடித்திருந்தேன். இதழ்களில் முத்தமிடுவதால் HIV தொற்று ஏற்படும் சாத்தியங்கள் மிக மிகக் குறைவாகவே உள்ளது. ஏனெனில் எமது உமிழ்நீர் ஒரு தடுப்புத் தன்மையைக் கொண்டதாக உள்ளமை காரணமாகும். அடுத்து உமிழ்நீரில் சூடு இருப்பதில்லை. எனவே வைரஸ் உமிழ்நீரில் வாழும் சாத்திய மற்றுள்ளது. ஆனாலும் தொற்று ஏற்பட்டவருடைய வாயிலும் முத்தமிடப்படும் மற்றையவருடைய வாயிலும் புண்கள் காணப்படுமாயின் தொற்று ஏற்படும் சாத்தியங்கள் உள்ளன என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

அடுத்து மிகப் பெரும் வினாவாக இருப்பது சவரம் செய்யும் கத்தி அல்லது பிளேட் மூலம் HIV வைரஸ் தொற்றுமா என்பதே? நீங்கள் அறிவுள்ளவர்களாயின் இக் கேள்விக்கான பதிலை இந்நேரமே அனுமானித்திருப்பீர்கள் என்றே நம்புகின்றேன். ஏனெனில் ஏற்கனவே நாம் பேசியது போல வைரஸ் வாழ்வதற்குத் தேவையான மிக முக்கிய விடயங்கள் இரண்டு. அவை ஊட்டச் சத்தும் சூடும் ஆகும்.

தொற்றுள்ளவருக்குச் சவரம் செய்த கத்தியில் அல்லது பிளேட்டில் அவரது இரத்தம் படியுமாயின் அவ்விரத்தத்திலுள்ள வைரஸ் அவ் இரத்தம் உறையும் வரைக்குமே அல்லது அவ்விரத்தம் தனது போசாக்கையோ அல்லது சூட்டையோ இழக்கும் வரைக்குமே வாழும். எனவே அடுத்தவருக்கு அதே கத்தியால் சவரம் செய்வதற்கு எடுக்கும் நேரத்தினுள் வைரஸ் இறந்து விடும். ஆதலால் மற்றையவருக்கு தொற்று ஏற்படும் வாய்ப்பேயில்லை.

ஆனாலும் தற்போது ஒரு வாடிக்கையாளருக்கு ஒரு பிளேட் என சிகை அலங்கரிப்பு நிலையங்களில் பாவிப்பது சுகாதாரத்திற்குச் சிறந்தது. அத்துடன் மற்றையவரின் தோல் நோய்கள் ஏனையவர்களுக்கும் தொற்றாமல் இருக்கும்.

அவ்வாறே ஊசிமருந்துச் செலுத்தியில் தொற்றேறப்பட்ட இரத்தத்தைக் கொண்டு வந்து மற்றையவருக்குச் செலுத்த எடுக்கும் நேரத்திற்குள் இரத்தத்திலுள்ள வைரஸ் இறந்துவிடும். ஆகவே அவ் விடயம் தொடர்பாகவும் உருவாக்கப்படும் வதந்திகளையிட்டு விழிப்புடன் இருக்க வேண்டும்.

HIV வைரசின் பண்பு

ஏனைய வைரஸ்களுடன் ஒப்பிடும் பொழுது HIV வைரஸ் மிகச் சவாலானது. அச்சவால்களைப் பார்ப்போமானால் முதலில் இவ் வைரஸ் இரத்தத்தில் தொற்றியவுடன் மனிதக் கலங்களின் வடிவத்தைப் போலவே தனது வடிவத்தையும் மாற்றிக்கொள்ளும் பண்பைக் கொண்டுள்ளது. இதனாலேயே எந்த மனிதக் கலத்தில் இவ்வைரஸ் உள்ளது என்பதைக் கண்டுபிடிக்கமுடியாது போய்விடுவதால் தற்போதுவரை இவ் வைரஸிற்கான தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்க முடியாது விஞ்ஞானிகள் தடுமாறி வருகின்றனர். ஏனெனில் மனிதக் கலங்களை தனது வடிவமாக மாற்றிக் கொள்ளும் இவ்வைரஸிற்கான தடுப்பு மருந்தை எந்த மனிதக் கலத்தினை அழிப்பதற்காக கண்டுபிடிப்பது? என்பதே விஞ்ஞானிகளது பெரும் கேள்வியாக உள்ளது.

இரண்டாவது சவாலாக இந்நோய் வெளிப்பட எடுக்கும் காலம் அந்நோய்த் தொற்றுக்குள்ளானவரின் உடல் வலுவிலேயே தங்கியிருப்பது. வலுவான உடலமைப்பையும். கிரமமான உடற்பயிற்சியையும். ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களையும் கொண்ட ஒருவருக்கு இந் நோய்த் தொற்று ஏற்பட்டால் நோய் தானாக வெளிப்பட 5 தொடக்கம் 20 வருடங்கள் வரை செல்லும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே ஆராக்கியமான ஒருவர் தாமாகவே சந்தேகித்து நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளதா என்பதைப் பரிசீலித்தாலேயொழிய நோய் முற்றித் தானாக வெளிவரும் வரை அந்நபர் தொற்றுக்குள்ளாகியுள்ளமையைக் கண்டறிய முடியாது.

இதனால் அந் நோய்த் தொற்றுக்குள்ளானவர் இன்னும் பலபேரை தொற்றுக்குள்ளாக்கி விடும் மிகப் பெரும் பயங்கரத்தை செயலாக்கக்கூடிய வாய்ப்பை இவ் வைரஸ் பெற்றுள்ளது.

எச்ஐவி யும் எய்ட்ஸ் உம் — HIV and AIDS

HIV என்பது எய்ட்ஸ் நோயைப் பரப்பும் வைரஸ் ஆகும். இவ் வைரஸின் தொற்றால் ஏற்படும் பல்வேறுபட்ட நோய்களின் கூட்டு எய்டஸ் ஆகும். ஆனால் எய்ட்ஸ் என்று ஒரு நோய் இருப்பதில்லை என்பதை கவனத்திற்கொள்க.

மேலே கட்டத்தினுள் தரப்பட்டுள்ள தமிழ் மொழிபெயர்ப்பைப் பாருங்கள். நோய் எதிர்ப்புப் பீடனக் குறைவு என்னும் பதங்கள் பாவிக்கப்பட்டுள்ளன. அதாவது எய்ட்ஸ் என்பது மனிதனின் இயற்கையான பாதுகாப்புக் கவசமான நிணநீர்ப் பீடனத் தொகுதியைத் தாக்கி அதன் செயலாற்றத்தைக் குறைத்து இல்லாதொழித்துவிடும். இதனால் ஏற்படுகின்ற சாதாரண தடிமன் கூட உடலை விட்டுப் போகாமல் நீண்ட நாட்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உடலில் பரவிவிடும். எனவே தான் எய்ட்ஸை நோய் எதிர்ப்புப் பீடனக் குறைவு நோய் எனச் சொல்லுகின்றோம்.




பீடனக் குறைவு நோய்

Acquired Immunodeficiency Syndrome




ஏதாவது ஒரு நோய் தொற்றி அதற்கு எதிர்ப்பு மருந்துகள் கொடுக்கப்பட்டும் அந்நோய் மாறாமலிருக்கும் போது வைத்தியர்கள் சந்தேகங்கொண்டு எய்ட்ஸ் நோய்க்கான இரத்தப் பரிசோதனையை மேற்கொள்ளுமாறு நோயாளியை வேண்டுவர். அவ்விரத்தப் பரிசோதனையின் ஊடாக மட்டுமே HIV தொற்று வெளிக் காட்டப்படலாம். அவ்வாறில்லாவிடில் தோலில் ஏற்படும் ஒரு விதமான படை இந் நோயை வெளிக்காட்டும். இவ்வாறு வெளிக்காட்டும் காலமானது பல வருடங்களுக்குச் செல்லலாம் என்பதை நாம் பார்த்தோம். அவ்வாறாயின் இவ்வருடங்களில் HIV வைரஸ் உடலினுள் என்ன செய்கின்றது?

முதலில் HIV வைரஸ் தொற்றியவுடன் மனிதனின் நிணநீர்ப்பீடனத் தொகுதி அவ் வைரஸ்களை அழித்துவிடும் செயற்பாடுகளை முன்னெடுக்கும். அதற்காக எதிர்புக் கட்டமைப்புக்களை உருவாக்கும் . இவ் எதிர்ப்புக் கட்டமைப்புக் களிலிருந்து HIV வைரஸ் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இரத்த செல்களாக தனது வடிவத்தை மாற்றிக்கொள்ளத் தொடங்கும். அதன் பின் மெல்ல மெல்ல உருவாக்கப்பட்டுள்ள எதிர்ப்புக் கட்டமைப்புக்களை அழிக்கத் தொடங்கும். இக்காலப்பகுதியை அதாவது தொற்று ஏற்பட்டதிலிருந்து நீர்ப்பீடணத்தொகுதியை அழித்து தனது கட்டுப்பாட்டுக்குள் HIV வைரஸ் கொண்டுவரும் வரைக்குமான காலப்பகுதியை நாம் அடைகாக்கும் காலம் என்கின்றோம். இவ் அடைகாக்கும் காலமானது ஒவ்வொரு மனிதனினதும் உடல் மற்றும் மன வலுவைப் பொறுத்து வேறுபடுகின்றது.

அடைகாக்கும் கால முடிவில் நீர்ப்பீடணத் தொகுதி அழிந்து வைரஸ் உடல் முழுவதையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தவுடன் நோய் வெளிவர ஆரம்பிக்கின்றது. நோய் வெளிப்படத் தொடங்கியவுடன் தான் அதனை நாம் எயிட்ஸ் என்கின்றோம்

அடுத்து எயிட்ஸ் என்பது ஒரு குறிப்பிட்ட நோயல்ல. ஏனெனில் நீர்ப்பீடணத் தொகுதி அழிந்தவுடன் ஏனைய நோய்க்கிருமிகள் யாவும் இலகுவாக உடலில் தொற்றிக்கொள்ளும். அவ்வாறு தொற்றிக்கொள்ளும் கிருமிகள் தத்தமது நோயை உடலிற் பரப்பும் இதனைால்தான் எயிட்ஸ் ஏன்பது நோய்களின் குழுமம் என கூறப்படுகின்றது.

எனவே இவ்வாண்டில் HIV எயிட்ஸ் சம்பந்தமான தெளிவான அறிவுடன் ஐ.நா சபையின் குறிக்கோளான பூச்சியத்தை அடைதல் என்னும் குறிக்கோளுடன் செயற்படுவோம் என்ற பிரதிக்கினையை எடுத்துக்கொள்வோம்.

நன்றி..

இ.ஸ்ரீஞானேஸ்வரன்
முன்னைநாள் கற்றல் குழு அங்கத்தவர்
ஐக்கிய நாடுகள் எய்ட்ஸ் நிறுவனம்.
ஐக்கிய நாடுகள் சபை.

# சந்தைகள் முடங்கினால் நகரின் அபிவிருத்திகள் தடங்கும்

நகரசபைத் தலைவர் செல்வராசா

ஜெபரவி

"சந்தைகள் முடங்கினால், நகரின் அபிவிருத்திகள் தடங்கும். சுமார் 70 வீத வரி வருமானத்தை இழக்கும் அபாயத்தில் நகர சபை" என அச்சம் தெரிவிக்கின்றார் திருமலை நகர சபைத் தலைவர் திரு.செல்வராஜா.

நகர சபையில் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் ஒன்றிலேயே பெரும்பான்மையினரால் கைப்பற்றப் பட்டு வரும் சந்தைத் தொகுதிகள் தொடர்பாக அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

1996 இல் முன்னாள் நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தியால் மக்கள் நலன் கருதி, மின்சார நிலைய வீதியில் ஸ்தாபிக்கப்பட்ட சந்தைக் கட்டட தொகுதிகள் இதுவரை காலமும் இயங்காமல் இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இவ்விடயம் தொடர்பாக செல்வராஜா கருத்து தெரிவிக்கையில் "இப்புதிய சந்தைத் தொகுதிகளின் இயக்க நிலையானது பிரதான சந்தையின் துரித வியாபார போக்கிற்கு பாதக நிலையை ஏற்படுத்தலாம் என அஞ்சியோரின் கோரிக்கைக்கு ஏற்ப புதிய சந்தையின் செயற்பாட்டிற்கு மேலதிகாரிகளால் தடை போடப்பட்டது. எனினும் 2006ம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட இனங்களிற்கு இடையிலான முறுகல் நிலையின் காரணமாக பிரதான சந்தைப் பகுதிகள் அதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டதை அடுத்து பெரும்பாலான தமிழ் பேசும் மக்கள் புதிய சந்தைத் தொகுதியை அண்மித்த பகுதிகளில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இருந்தபோதிலும் பிற்காலங்களில் சமூகத்தில் ஏற்பட்ட சுமூக நிலை, பிரதான சந்தையின் கட்டுமானப் பணிகளின் நிறைவு மற்றும் பெரும்பான்மையினரின் மேலாதிக்க நிலையை அடுத்து புதிய சந்தைத் தொகுதிகள் மீண்டும் முடக்கப்பட்டன. இது தொடர்ந்தும் இயங்காமல் இருந்ததை அடுத்து அவசர கால சட்டத்தை அடிப்படையாக கொண்டு இலங்கை இராணுவ படையினரால் [illegible] இடப்பட்டுள்ளது. [illegible] நகர சபையிடம் பெறப்படவில்லை எனவும் கூடிய விரைவில் அவர்களை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கையில் தாம் ஈடுபட்டு வருவதாகவும் விளக்கும் அவர் பிரதான சந்தையை போலவே இப்புதிய சந்தையும் தம் வரி மார்க்கங்களிற்கு உட்பட்டது எனவும் அது இயங்குவதால் நகர அபிவிருத்திக்கு தேவையான வரி வருமானம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் கூறினார். இவ்வாறு உள்ள நிலையில் பிரதான சந்தை தொகுதியை கடற்றொழில் அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி பாதுகாப்பு அமைச்சு ஆகியன தங்களிற்கு கீழ் கையகப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவதாக வெளியாகி உள்ள தகவல் மக்கள் மத்தியில் அதிர்ச்சி நிலையை ஏற்படுத்தி உள்ளது.

"இது தொடர்பாக மீன் பிடித்துறையின் பிரதி அமைச்சர் புஞ்சி நிலமேயின் தலைமையில் நடாத்தப்பட்ட பொது மக்கள் கூட்டத்தில் மக்களிடம் கருத்து [illegible] வேளையில் மக்கள் அதை [illegible] புறக்கணிக்கவோ முன்வராது அமைதி காத்தமை எதிரணியினர்க்கு சாதக நிலையை ஏற்படுத்தியுள்ளது." என செல்வராஜா அதிருப்தி தெரிவிக்கின்றார். இச்சந்தை அபகரிப்பு திட்டத்திற்கு மறுப்பு தெரிவித்து ஜனாதிபதி, ஆளுனர் மற்றும் சம்மந்தப்பட்ட மேலதிகாரிகள் உட்பட 37 பாராளுமன்ற உறுப்பினர்களிற்கு கடிதங்கள் அனுப்பி உள்ளதாகவும், இத்திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டால் நீதி மன்ற வழக்கு தொடுக்கப்படும் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக உறுதிப்படுத்தும் அவர் கூட்டங்களில் சந்தை அபகரிப்பு தொடர்பான தம் கருத்தை மக்கள் உறுதியுடன் முன் வைத்து திருமலையின் அபிவிருத்திக்கு துணை நிற்க வேண்டும் எனவும் கோருகின்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முரசின் உலக வலம்

# இஸ்ரேலைக் காத்த இரும்புக் கவசம்

## அயர்ன் டோம் – Iron Dome



அண்மையில் இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனியர்களுக்கும் இடையே நடந்த யுத்தத்தில் இஸ்ரேலியர்களை ஹமாஸ் போராளிகளின் குறுந்தூர ஏவுகணை மற்றும் ஆட்டிலறித் தாக்குதல்களிலிருந்து காத்துள்ளது இரும்புக் கவசம் என தமிழில் மொழி பெயர்க்கக் கூடிய அயர்ன் டோம் எனும் ஏவுகணை எதிர்ப்புப் பாதுகாப்புத் திட்டம்.


2006ம் ஆண்டில் இஸ்ரேல் இரண்டாவது லெபனான் போரில் தனது வடபகுதியில் சுமார் 4,000 குறுந்தூர ஏவுகணைகளின் தாக்குதல்களையும் அவ்வாறே தனது தென்பகுதியில் 2000ம் ஆண்டு தொடக்கம் 2008ம் ஆண்டுவரை சுமார் 4,000 122 மில்லி மீற்றர் கிறட் ரக கஸாம்ஸ் ரக ஏவுகணைகளின் தாக்குதல்களையும் எதிர் கொண்டிருந்தது. இத்தாக்குதல்களால் சுமார் 1 மில்லியன் இஸ்ரேலியர்கள் இடம்பெயர்வுக்கும் உள்ளாகியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து குறுந்தூர ஏவுகணைத் தாக்குதலிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த இஸ்ரேலிய அரசு தயாராகியது. அத்திட்டத்தின் குழந்தையாக இன்று இஸ்ரேலியர்களைப் பாதுகாத்துள்ளது அயர்ன் டோம்.


ராபெல் முன்னேற்றகரமான பாதுகாப்புத் திட்டக் கம்பனியால் உருவாக்கப் பட்டுள்ள இந்த அயர்ன் டோம் எந்தக் காலநிலையிலும் தாக்குதல்களைத் தடுக்கக்கூடியதாகத் தயாரிக்கப் பட்டுள்ளது.


70 கிலோமீற்றர் வீச்சைக்கொண்ட இந்த ஏவுகணைப்பாதுகாப்பு ஏவுகணைகள் மோட்டர்க்குண்டுத் தாக்குதல், ஆட்டிலறித் தாக்குதல், ஏவுகணைத்தாக்குதல் உட்பட விமானத் தாக்குதலையும் எதிர்கொள்ளும் விதமாக உருவாக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

அமெரிக்க டைம்ஸ் பத்திரிகையின் கூற்றுப்படி கடந்த வாரச் சண்டையில் பலஸ்தீனியரின் 90வீதமான ஏவுகணைகளை அயர்ன் டோம் ஆளில்லா இடங்களுக்கு அழைத்துச் சென்று அழித்துள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது எனினும் ஒக்கிபயிட் பலஸ்தீனியன் என்னும் வலையகம் சுமார் 36 வீதமான பலஸ்தீனிய ஏவுகணைகளே இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளன என மற்றோர் தகவலை வெளியிட்டுள்ளது.



## ஆடம்பரமாக வாழ்வதற்காக பணம் சேர்ப்பவனே ஏழை – ஜோஸ் முஜீகா





உருகுவே நாட்டின் அதிபர் ஜோஸ் முஜீகா தான் உலகின் ஏழ்மையான அதிபர் என்று அழைக்கப்படுகிறார். இவர் நாட்டின் அதிபராக இருந்தபோதிலும் அதிபர்களுக்கு வழங்கப்படும் வீட்டை விட்டு ஒரு சாதாரண பண்ணை வீட்டில் வசித்து வருகிறார். குண்டு துளைக்காத கண்ணாடி போட்ட கார்களை பயன்படுத்தும் நாட்டுத்தலைவர்களுக்கு மத்தியில் இவர் 1987ம் ஆண்டின் பீடில் ரக கார் ஒன்றை வைத்திருக்கிறார்.

அவரது மாதச்சம்பளத்தில் 90 சதவீதத்தை தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கும் அவர் உருகுவேயின் சராசரி குடிமகனின் வருமானத்தை மட்டுமே தனக்காக வைத்துக் கொள்கிறார்.

இது பற்றிக் கருத்துத் தெரிவித்த அவர் "ஆடம்பரமாக வாழ்வதற்காக பணம் சேர்ப்பவனே ஏழை" என்று தெரிவித்தார்.

# ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்

- பிரதீபா -

1. "நாளை நடைபெறவுள்ள நிகழ்ச்சிக்கு மாணவர்கள் அனைவரும் சமூகமளிக்க வேண்டும்" இது ஆசிரியரின்
   1. அறிவுறுத்தல் 2. விளம்பரம் 3. அறிவித்தல்
2. வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும் என்பதைக் கூறும் சரியான பழமொழி யாது?
   1. சிறு துளி பெரு வெள்ளம் 2. கந்தையானாலும் கசக்கிக் கட்டு 3. பேராசை பெருநட்டம்
3.  உருவில் தரப்பட்டதைப் பற்றி நன்கு விபரிக்கும் கூற்று யாது?
   1. தாவர மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் 2. நோய்களைப் பரப்புவது 3. ஓடும் நீரில் முட்டையிடுவது
4. பின்வரும் இசைக் கருவிகளில் தோற்கருவி அல்லாதது?
   1. தபேலா 2. தவில் 3. வீணை
5. விற்றமின் C குறைபாட்டால் ஏற்படும் நோய்?
   1. குவாசியக்கோர் 2. ஸ்கேவி 3. என்புருக்கி
6. சாம்பல் நிறத்தைப் பெறுவதற்கு சேர்க்க வேண்டிய வர்ணங்கள்?
   1. நீலம், கறுப்பு 2. வெள்ளை, கறுப்பு 3. மஞ்சள், கறுப்பு
7. இப்படம் குறிக்கும் நிறுவனம் எது?
   1. இலங்கை ரூபவாஹினிக்கூட்டுத்தாபனம் 2. இலங்கை அஞ்சல் திணைக்களம் 3. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
8. எத்தாவரத்தின் மொட்டைப் பயன்படுத்தி உணவைச் சுவையூட்டுகிறார்கள்?
   1. கறுவா 2. ஏலம் 3. கராம்பு
9. எமது குருதியில் உள்ள நீரின் சதவீதம்?
   1. 65 வீதம் 2. 90 வீதம் 3. 95 வீதம்
10. லீப் வருடமான 2008ல் ஜனவரி 1ம் திகதி செவ்வாய்க் கிழமை எனின், 2012ன் டிசம்பர் 31ஆந் திகதி என்ன கிழமையாகும்?
    1. சனி 2. ஞாயிறு 3. திங்கள்
11. ரமணியின் வயது, ரூபியின் வயதின் அரைவாசியாகும், ரூபியின் வயது தர்சினியின் வயதின் அரைவாசியாகும். மூவரினதும் கூட்டுத்தொகை 35 ஆண்டுகள் எனில், தர்சினியின் வயது யாது?
    1. 15 2. 18 3. 20
12. ஒரு குவியலில் அப்பிள், தோடை, பப்பாசி ஆகிய பழங்கள் உள்ளன. இதில் அப்பிள் பழத்தை விட தோடம்பழம் கூடுதலாகவும், தோடம்பழத்தை விட பப்பாசி குறைவாகவும் இருந்தது எனில், குவியலில் மிகக் கூடுதலான அளவு உள்ள பழம் எது?
    1. அப்பிள் 2. தோடை 3. பப்பாசி
13. மு.ப 3.30 இற்கு கொழும்பு விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட ஆகாய விமானம் அன்றைய தினம் பாங்கொக் நேரம் மு.ப 8.00 மணிக்கு பாங்கொக் விமான நிலையத்திற்கு வந்திறங்கியது. கொழும்பில் நேரம் மு.ப 6.00 மணியாகும் போது, பாங்கொக் நேரம் மு.ப 7.00 மணியாகும். எனின், விமானப் பயணத்திற்கு எடுத்த நேரம் என்ன?
    1. 3.30 மணித்தியாலங்கள் 2. 4.30 மணித்தியாலங்கள் 3. 5.30 மணித்தியாலங்கள்

**14ம், 15ம் வினாக்களுக்கு பின்வரும் பொருள்களின் விலைகளின் கூட்டுத்தொகையை அவதானித்து விடை தருக.**

| | | |
|---|---|---|
| 1 அழிறப்பர், 2 பேனைகள் | 1 அழிறப்பர் | 2 பேனைகள் |
| 3 புத்தகங்கள் | 2 புத்தகங்கள் | 1 புத்தகம் |
| ரூ. 335 | ரூ. 205 | ரூ 130 |

14. 2 அழிறப்பர்களினதும், 3 புத்தகங்களினதும் விலை யாது?
    1. ரூபா 310 2. ரூபா 305 3. ரூபா 335
15. 2 புத்தகங்களினதும், 1 பேனையினதும் விலை யாது?
    1. ரூபா 230 2. ரூபா 215 3. ரூபா 235
16. 7 முயல்கள் மூன்று வேளையும் இரண்டு நாட்களுக்கு சாப்பிடும் கரட்களின் எண்ணிக்கை 84 எனின், 5 முயல்கள் மூன்று வேளையும் இரண்டு நாட்களுக்கு சாப்பிடும் கரட்களின் எண்ணிக்கை யாது?
    1. 30 2. 60 50
17. 375மி. லீ கொள்ளளவுடைய 7 பானப் போத்தல்களில் உள்ள பானம் ஒரு பாத்திரத்தினுள் ஊற்றப்படுகின்றது எனின், பாத்திரத்தினுள் உள்ள பானத்தின் கொள்ளளவு யாது?
    1. 2025 மி.லீ 2. 2625 மி.லீ 3. 2275 மி.லீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிக்கடைச் சிறையில் நீதி மறுக்கப்பட்டதா ?

– மாயன் –

நன்றி - சண்டேலீடர் November 25, 2012

விஜய ரோகணவின் தாய் தனது மகனின் மரணம் தற்செயலானதோ அல்லது ஒரு விபத்தோ அல்ல என்று புலம்பிக் கொண்டிருப்பது கேட்கின்றது.

விஜய ரோகணவைக் குண்டு என்று அழைப்பது உண்டு என அவனது தாய் சிரியாவதி சொல்லிப் புலம்புகின்றாள்.

வெலிக்கடைச் சிறையினுள்ளே என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை குண்டு சம்பவம் நடந்த அன்று தனது தாய்க்கு இரவு 8 மணியளவில் கையடக்கத் தொலைபேசியூடாக அறியத்தந்திருந்தான்.

“ ஹலோ…அம்மா…இச்ஞ நிறை வெடிச்சத்தங்கள் கேக்குது…. நீ பயப்பிடாமலிரு அம்மா… நான் உயிரோடதான் இருக்கிறன்” தனது கடைசி வசனத்தில் கூட குண்டு தான் உயிருடன் இருப்பதாகவே தெரிவித்துள்ளான்.

“ மகனே குண்டு... வெளிய போகாத... கூடத்தின்ர கதவைப் பூட்டிப்போட்டு இரு ராசா...” சிரியாவதியின் பதை பதைப்பான பதில்.

மறுநாட் காலை மீளவும் சிரியாவதியின் தொலைபேசி சினுங்கியது...

“ ஹலோ.... சிரியாவதியா?..... உன்ர மகனாத்தான் இருக்கோணும்....உடம்பு சவச்சாலையில கிடக்குது....”

யமனாய் வந்தது அந்த அழைப்பு. எனினும் சிரியாவதிக்கு நம்பிக்கையில்லை. சவச்சாலைக்கு விரைந்த போதெல்லாம் சிரியாவதியின் குண்டுவின் சிரிப்பு அவளின் கண்முன்னே ..... காதுகளில் நிறுத்தங்களில் எல்லாம்..... அவன் செத்திருக்க மாட்டான்.

ஆனால் மாலை 4 மணிக்கு குண்டுவின் உயிரற்ற உடலைத் தவிர...தனது 40 வயது மகனின் மரணத்தைத் தவிர அவளுக்கு பதிலாய் எதுவுமெ கிடைக்கவில்லை.

பத்து கிராம் போதைப் பொருளைத் தன்னுடன் வைத்திருந்த குற்றத்துக்காக நீண்டகாலச் சிறையிலடைக்கப்பட்ட குண்டு ஏற்கனவே ஐந்து வருடங்களைச் சிறையில் கழித்திருக்கும் இவ் வேளையில் மரணமடைந்துள்ளான்.

“ அவன் என்னைத் தொலைபேசியில் அழைத்த போது தடுமாற்றமாகவே இருந்தான் எனினும் தான் தன் ஏனைய மூன்று சிறைக் கைதிகளுடன் தமது செல்லிலேயே இருப்பதாக அவன் தெரிவித்தான்” அடுத்த நாட்காலை நான் அவனது மற்றைய சிறைக்கூடச் சகா ஒருவனுடன் பேசினேன். அவன் எனக்குச் சொன்னான் “ நாம் மூவரும் செலலுக்குள்ளே இருக்கின்றோம். ஆனால் குண்டுவின் சிறைக்கூடத்துக்குச் செல்லப் பயமாக இருக்கின்றது. அவன் உள்ளே தான் இருக்க வேண்டும்” என்று தடுமாற்றத்துடன் சொன்னான்.

எனது மகனை நான் சவச்சாலையில் பார்த்தபோது அவனதும் அவனுடன் கிடத்தப்பட்டிருந்த சிலரதும் தலைகளின் பின்புறம் உடைத்திருந்தது. “ எனது மகன் தப்பான எதையோ சிறைச்சாலைக்குள் செய்துள்ளான்… ஆனாலும் அதற்காகக் கொல்லப்பட்டான் என்பதை எவ்வாறு நியாயப்படுத்த முடியும் ?”

சிரியாவதியின் வினா விடையின்றி காற்றில் பறந்துகொண்டேயிருக்கின்றது... கொல்லப்பட்டது நியாயம் தானா?

“ என்னைப் புதைக்க வேண்டிய எனது மகனின் சடலத்தை நான் புதைத்தது மிகவும் வேதனையே…அதைத் தாங்கமுடியாது… ஆனால் வறிய மக்களான எமக்குரிய சட்டம் வேறானதாகவே இங்குள்ளது” சிரியாவதி நீரொழுகும் கண்களுடன் காற்றில் தன் வினாக்களைத் தொடுத்துக்கொண்டே இருக்கின்றாள். மற்றோர் பெயர் கூற விரும்பாத் தாயொருவள் தனது 34 வயதான மகனின் மரணம் தொடர்பாகப் பேசத் தொடங்கினாள். எனது மகன் அந்த இரவில் பலதடவைகள் தொலைபேசி யழைப்பை மேற்கொண்டிருந்தான். ஆனாலும் காலையில் அவனது உடலத்தையே காண முடிந்தது. நான் அவனது உடலத்தில் விழுந்து அழுத போது அவனது உடல் சூடு குறையாமலிருந்தது..... அவன் இறந்து சில மணித்துளிகளே ஆகியிருக்கும் என்று எனக்கு உடனேயே தெரிந்து போயிற்று. ஆனால் அனைவரும் அவன் இரவின் ஆரம்பத்திலேயே இறந்து விட்டதாகச் சொன்னார்கள்.

ஆனால் மிக துரதிஸ்டக்காரனாக லெஸ்லி இருந்துள்ளான். வெறும் 7 நாட்களுக்குச் சிறைப்பட்டிருந்த லெஸ்லி இந்தச் சண்டையில் இறந்து போய்விட்டான். தெருவிதிமுறைகளை மீறி போதையுடன் வாகனம் செலுத்தியதற்காக லெஸ்லி 13 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டான். அவனுக்கு அதனைச் செலுத்த முடியாதிருந்ததால் மேலும் 7 நாட் சிறைவாசம் அனுபவிக்க நேரிட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தண்டம் கட்ட முடியாததால் மேலும் 2 வருட சிறைவாசத்தில் இருந்துள்ள அவனது சாவிற்குக் காரணம் ஒன்றில் இருதரப்பிற்கும் இடையில் சிக்குண்டோ அல்லது சகபாடிகள் சகட்டு மேனிக்குச் சுட்ட போதோ தான் நிகழ்திருக்க வேண்டும்.

வாரங்கள் கடந்த நிலையில் வெலிக்கடைக் கொலைகளுக்கு பதிலென்னவோ “விசாரணைகள் தொடர்கின்றன” என்பதாகவே உள்ளது.

வெலிக்கடைச் சிசைச்சாலையின் நெடிதுயர்ந்த மதில்களிலிருந்து பல ஆண்டுகளுக்கு முன்னரான ஒருசில குரல்களின் ஒலியின் வலி வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப் பயணிக்கத் தொடங்கியிருக்கின்றது. தொடரட்டும் விசாரணைகள்......

## சுதந்திரதின வாழ்த்துக்கள்

பவித்ரனின் குறியிடல் கவிதைத் தொகுப்பிலிருந்து

தூக்கம் வராத இரவுகளில்
நேர்த்திக் கடன்களுக்காக
உயிரகற்றும் பலியிடங்களில்
காத்துக்கிடக்கிறார்கள் சிலர்

எங்கும் கறுப்புமை பூசிய
இரும்புக்கைகளோடு தயாராக

இழுத்துச் சென்ற
பெண்களின்
முலைகள் கடித்துத் துப்பப்பட்டன
குறிகளும் கிழித்தெறியப்பட்டன
கண்கள் பிடுங்கப்பட்ட
ஆண்கள்
குறி அறுந்தவர்களாய்
எரியூட்டப்படுகின்றனர்

சற்று நேரத்தில்
நானும்
கண்களின்றி
குறியிழந்தவனாக

அதற்கு முன்
நானொரு உண்மையை
சொல்ல வேண்டும்

பலிபீடங்களுக்கு
முன்னிருந்த சிலை
கையில் எவ்வித
ஆயுதங்களையும்
வைத்திருக்கவில்லை

இரத்த வெறிக் கண்கள்
கொடூர பற்கள்
கொலை வெறி முகம்
எதையுமே அது
கொண்டிருக்கவில்லை

உதட்டோர சிரிப்பு
மூடிய கண்கள்
கட்டிய கை
மடிந்த பாதம்
உலகறிந்த வெள்ளை மனம்

உண்மையில் இவ்வாறுதான்
குறி அறுத்து இதோ என்
சிவப்பாக்கப்படுகிறது
அந்தச் சிலை

யாரோ என்னிடம்
கூறுகிறார்கள்
சுதந்திரதின வாழ்த்துக்கள்

## வடக்கு – கிழக்கு மாகாணத்தில் தமிழ் பிரதிநிதித்துவ விகிதாசாரம் மாற்றப்பட்டு

தேர்தல் மூலம் அரசியல் அதிகாரத்தினை கைப்பற்ற இலங்கையில் ஆட்சி செய்த பேரினவாத அரசுகள் இலக்கோடு செயல்பட்டுள்ளன. எதிர்காலத்தில் செயல்படும்.

நந்தன் மாஸ்டர்

1980 ஆண்டு சட்டப்படி பிரதேச சபைகள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் பிரதேச சபைகளை அமைக்கும் அதிகாரம் கௌரவ உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சருக்கு வழங்கப்பட்ட பின்னர் வடக்கு கிழக்கில் சிங்கள குடியேற்றங்கள் அமைக்கப்பட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலெல்லாம் பிரதேச சபைகள் அமைக்கப்பட்டன.

இதன் மூலம் பெரும்பான்மையின் குடியேற்றங்களில் சிறிய பகுதிக்கு கூட அரசியல் தலைமைத்துவம் உருவாக்கப்பட்டது.


உதாரணமாக திருக்கோணமலை மாவட்டத்தில் கோமரங்கடவெல பிரதேச சபை 4,076 வாக்காளர்களை கொண்டிருந்த போது பிரதேச சபையாக்கப்பட்டது. மொரவெ பிரதேச சபை 2,242 வாக்காளர்களையும், பதவிஸ்ரீபுர பிரதேச சபை 7,023 வாக்காளர்களையும் சேருவில பிரதேச சபை 10,981 வாக்காளர்களையும் கொண்டிருந்த போது பிரதேச சபைகளாக்கப்பட்டன. திருக்கோணமலை மாவட்டத்தில் பல பிரதேசங்களில் தமிழ் மக்கள் செறிவாக இருந்தும் அவர்களுக்கென தனியான பிரதேச சபை உருவாக்கப்படவில்லை.

உதாரணமாக மூதூர் பிரதேசத்தில் அப்போது 25,560 தமிழ் வாக்காளர்கள் இருந்த போதும் அவர்களுக்கென ஒரு பிரதேச சபை உருவாக்கப்படவில்லை. திருக்கோணமலை மாவட்டத்தில் திருக்கோணமலை நகரசபையும், உப்புவெளி பட்டணமும் சூழலும் பிரதேச சபையும், ஈச்சிலம்பற்று பிரதேச சபையும் மட்டுமே தமிழர்களுக்கு ரியதாகவுள்ளது.

புதிய தேர்தல் முறை என்ற பெயரிலும், பிரதேச சபைகளை தரமுயர்த்துதல் என்ற போர்வையிலும், எல்லை மீள் நிர்ணயம் என்ற போர்வையிலும் எதிர்காலத்தில் தமிழ் மக்களின் பிரதேசங்களை அபகரிக்கும் முயற்சி குறித்து தமிழ் அரசியல் தலைவர்களும் சமூக பற்றுள்ள புத்திஜீவிகளும் விழிப்போடு இருப்பதோடு இவ்விடயம் குறித்து பயனுள்ள கருத்தாடல்களை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

சி.நந்தகுமார்
நகராட்சி மன்ற உறுப்பினர்

## காவிய ஸ்ரீ பட்டத்தை பெற்றார் அம். கௌரிதாசன்



கவிஞர். அம்பலவானர் கௌரிதாசனுக்கு கொழும்பு சமஸ்த லங்கா தேசிய கவிஞர்கள் சம்மேளனம் 20.10.2012 அன்று “காவிய ஸ்ரீ” பட்டம் வழங்கி கௌரவித்தது.

திருமலையின் ஆலங்கேணிப் பிரதேசத்தைச் சேர்ந்த அம்பலவானர் கௌரிதாசன் மிக நீண்ட நாட்களாக கவிதைத்துறையில் இயங்கி வருபவர் கௌரிதாசன் கவிதைகள், கௌரிதாசன் காதல் பாசைகள், ஆலையூர் பதிகம் மற்றும் மழலைப் பா (சிறுவர் இலக்கியம்) போன்ற நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

ஏற்கனவே கௌரிதாசன் அவர்களுக்கு கிண்ணியா பிரதேச சபையின் சாகித்ய விழாவில் (2010) “கவிநிலா” என்ற பட்டமும், தி /கிண்ணியா அல்ஹாக் எம்.ஈ.எச்.மகரூப் மன்றத்தால் (2001) “கவிஞர் திலகம்” என்ற பட்டமும், தி / ஆலங்கேணி விநாயகர் : மகா வித்தியாலயத்தால் (2002) “கவிதைப் புரவி” என்ற பட்டமும், தமிழ் நாடு இலக்கிய பொது நல இயக்கத்தால் (2001) “தமிழருவி” என்ற பட்டமும், ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்தால் “கவிமணி” என்ற பட்டமும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இசைத்தட்டு வெளியீடும் இசை நடன நிகழ்வுகளும்

பிருதுவிராஜ் இன் “THE F_WORLD ”எனும் இசைத்தொகுப்பிற்கும் கனடாவில் வெளியீடு செய்யப்பட்ட அகராதியின் “சாமகானம்” எனும் இசைத் தொகுப்பிற்குமான இசைத்தட்டுக்களது வெளியீட்டு விழா எதிர்வரும் தை மாதம் 20ம் திகதி இடம் பெறவுள்ளது. வெளியீட்டு விழாவைத் தொடர்ந்து இசை நிகழ்ச்சிகளும் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளதுடன் இந்நிகழ்ச்சிக்கான ஊடக அனுசரனையை மலைமுரசு பத்திரிகை வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### க.பொ.த...

தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் செல்லுபடியான கடவுச் சீட்டின் மூலம் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளலாம் எனவும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. மேலும் 2012.10.31 வரை 16 வயதை பூர்த்தியடையாத பரீட்சார்த்திகள் மாத்திரமே தபால் திணைக்கள அடையாள அட்டையை பாவிக்க முடியுமெனவும் கூறப் பட்டுள்ளது. (சே)

### அதிரடியில் ....

கடந்தவாரம் சிவன் கோவிலுக்கு முன்பாகத் திரண்ட நகரசபை அலுவலர்கள் காவல்துறையினரின் உதவியுடன் உந்துருளிகளைத் தடுத்து நிறுத்தி அனுமதித் தகடற்ற உருளிகளுக்கான தகடுகளை அவ்விடத்திலேயே வழங்க நடவடிக்கை எடுத்தனர்.

இதனைப் பெருமளவு உந்துருளியாளர்கள் எதிர்பார்க்காதிருந்த போதிலும் அவர்கள் தகட்டைப் பெற்றுக்கொள்ளத தயக்கம் எதனையும் காட்டவில்லை.

அத்துடன் தாம் நகரசபைக்குச் சென்று நேரத்தைச் செலவழிப்பதைவிட இவ்வாறு உடனடியாக அனுமதித் தகட்டைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருப்பது தமக்கு எவ்வித அசௌகரியங்களையும் தரவில்லை என அவர்கள் மேலும் மலைமுரசிற்குத் தெரிவித்தனர்.

ஒவ்வோராண்டும் ஆரம்பத்திலேயே இவ்வாறு உந்துருளி அனுமதித் தகட்டை குறிப்பிட்ட இடங்களில் வைத்து வழங்க நகரசபை முன்வருமானால் அச்சேவை தமக்குச் சிறப்பாக இருக்கும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

### தேசிய ....

க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் பயின்று வரும் சபேசினி சாந்தசிவத்தின் 'உறிஞ்சல்மானி' அமைப்புக் கட்டமைப்பை அதிபர் திருமதி ஜோதிநாதனின் மேற்பார்வையில் விஞ்ஞான ஆசிரியை திருமதி க.ஜெயபாலினி நெறிப்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.



இவருக்கான தேசிய விருது இம்மாதம் 06 ஆம் திகதி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வழங்கி வைக்கப்படவிருக்கின்றது.

### மாவட்டம்......

ஈடுபட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

சில இடங்களில் வீதியில் சென்ற மக்களினுடைய ஆளடையாளங்களை உறுதிப்படுத்தியதாகவும் பெருமளவுக்கு இக்கால இரவு நேரங்களில் திருமலையின் கடற்கரை பகுதிகளிலும், மக்கள் கூடும் பொழுது போக்கிடங்களிலும் பெருமளவான படையினர் , காணப்பட்டதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இரவில் பயணம் செய்தவர்களிற் பலர் ஆளடையாளத்துக்கு உட்படுத்தப் பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இந்நடவடிக்கை நடைபெற இருக்கின்ற சுதந்திரதின பாதுகாப்பு முன்னேற்பாடாகவும் இருக்கலாம் எனவும் மேலதிக கருத்துக்கள் தெரிவிக்கின்றன. (சே)

## மதுபோதையில் மாணவர்கள்!!!!

எமது செய்தியாளர் தெரிவித்தார்.

சுமார் மாலை 5.00 மணியளவில் கைகலப்புக்கள் நிகழத் தொடங்கியவுடன் மாணவர்கள் கூச்சலிட்டவாறு அங்கிங்காய் ஓடத் தொடங்கியுள்ளனர். சிலர் நகர சபையின் பின்புறமாகச் சுவரேறிக்குதித்து மக் கெய்ஸர் விளையாட்டுத் திடலினுள் புகுந்தும் உள்ளனர். அங்கு ஏற்பட்ட களோபரங்களை விளையாட்டுத் திடலில் இருந்த இராணுவத்தினர் அடக்கியுள்ளனர். நூலக வாகனத் தரிப்பிடத்திலும் கடும் கைகலப்புக்கள் நிகழ்துள்ளன. மாணவனொருவனைக் கட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த நூலக உதவியாளர் ஒருவர் அருகிலிருந்து எமது செய்தியாளரிடம் அம்மாணவன் மது அருந்தியிருந்ததை அழைத்துக் காட்டியுள்ளார். களோபரங்களைத் தொடர்ந்து தெருவில் காவலில் இருந்த போக்குவரத்துக் காவல்துறை அலுவலர்களின் தலையீட்டால் நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. காவல்துறை அலுவலர் ஒரு மாணவனைக் கட்டுக்குள் கொண்டுவந்து அம்மாணவனை சோதனையிட்டபோது அவரிடமிருந்த புகைப்பிடித்தல் பெட்டியையும் சிகரெட்டுக்களையும் எமது செய்தியாளரிடம் அக் காவல்த்துறை அலுவலர்

### தேர்தல்.....

பணிமனையால் செலுத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன..

திருக்கோணமலை மாவட்டத்திலிருந்து தேர்தல் பணிகளில் ஈடுபட்ட ஆசிரியர்களுள் சுமார் 250 ஆசிரியர்களின் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கி வைக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்துள்ளது.

இக்கொடுப்பனவுகளை உரிய நேர காலத்துள் வழங்கி வைக்குமாறும் இது பற்றி கவனம் செலுத்துமாறும் சம்மந்தப்பட்டவர்கள் திருக்கோணமலை வலயக்கல்வி பணிமனையிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

### இலஞ்சத்தில்.....

சேர்ந்தவர்கள் என இவ் ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். இதற்கு அடுத்த படி நிலையில் இருப்பவர்கள் வன இலாகா அலுவலர்கள் ஆகும். 10 வன இலாகா அலுவலகர்கள் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்டிருந்தார்கள்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தகவல் தருகையில் பெருமளவு காவல் துறையினர் கைது செய்யப்பட்டாலும் குற்றச்சாட்டுக்களிற் பெருமளவானவை புதிய பாடசாலை அனுமதிக்காக இலஞ்சம் பெறப்படும் குற்றச்சாட்டுக்களே என இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்

காட்டியுள்ளார். அதனைத் தொடர்ந்து அம் மாணவனை கட்டிடத்தைவிட்டு வெளியகற்றிச் சென்றுள்ளார் குறித்த அக் காவல்த்துறை அலுவலர். தொடர்ந்து உள்நுழைந்த மேலும் இரு போக்குவரத்துக் காவல்த்துறையினர் கூட்டங் கூட்டமாகக் கூடிநின்ற மாணவர்களைக் கலைந்து போகச் செய்துள்ளனர். கருத்தரங்கிற் கலந்துகொண்டவர்கள் எவருமே பாடசாலைச் சீருடையில் கலந்து கொள்ளாமையால் தெரிந்த சில மாணவர்களைத் தவிர ஏனைய மாணவர்களை எமது செய்தியாளரால் எப்பாடசாலைக்குரியவர்கள் என அடையாளம் காண முடியவில்லை. பெருமளவு மாணவிகளும் இக் களோபரத்துக்குள் சிக்கியிருந்ததனர். இதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளப் போவது யார் என்பதே இப்போதுள்ள கேள்விக்குறியாக உள்ளது. சம்பவ இடத்திலுருந்து எமது செய்தியாளர் உடனடியாகப் பிரபல பாடசாலையொன்றின் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் ஒருவரைத் தொடர்புகொண்டு விடயத்தைக் கூறிய வேளையில் "இக்கருத்தரங்கு பாடசாலையால் ஒழுங்குபடுத்தப்படவில்லை என்று" பதிலளித்துள்ளார். எனவே இவ்வகைக் கருத்தரங்குகளில் மாணவ மாணவிகளுக்கு நிகழும் எந்த விடயத்திற்கும் பாடசாலைகள் பொறுப்பை ஏற்காதா?

ஏற்பாட்டாளர்கள் எந்த அடிப்படையில் மாணவர்களை அரங்கிற்குள் அனுமதித்துள்ளார்கள் என்பது தெளிவற்றுள்ளது. க.பொ.த உயர்தரம் கற்கும் மாணவர்கள் எவ்வாறு இக் கருத்தரங்கிற்கு வருகை தந்துள்ளார்கள் என்ற கேள்விக்குப் பதிலளிப்பதற்கு பிரதம ஏற்பாட்டாளர்கள் எவரும் அச்சம்பவ இடத்திலிருக்கவில்லை எனச் செய்தியாளர் தெரிவித்தார்.

அடுத்து கல்விக் கருத்தரங்குகளை யாரும் எவ்வித முன்னேற்பாடுகளுமின்றி நடாத்த முடியுமாயின் அவ்வகைக் கல்விக் கருத்தரங்குகளில் கல்வித் திணைக்களத்தின் பங்கென்ன என்பதும் தெளிவற்றுள்ளது.

அடுத்து தமது குழந்தைகளின் நடத்தைகள் தொடர்பாக பெற்றோர் ஏன் கவனிப்பின்றி உள்ளனர் என்பது பெரும் அச்சமூட்டக்கூடிய விடயமாக உள்ளது என இச்சம்பவத்தை நேரில் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் தெரிவித்துள்ளனர். மதுபோதைக்கும் சிகரெட்டுக்குமான பணத்தை மாணவர்கள் எவ்வாறு பெற்றுக் கொள்கிறார்கள் என்பதையும் கருத்தரங்கிற்கு வருகைதந்து விட்டு மது நாற்றத்துடன் அவர்கள் வீடுகளுக்குத் திரும்பும்போது பெற்றோரின் அவதானிப்பில்லாமலா இருக்கப் போகின்றது என்பதும் கேள்விக் குறியாகியுள்ளது.

எவருமே பொறுப்பேற்காமல் இவ்விடயம் விடப்படுமானால் திருமலையின் இளைய சந்ததியின் நிலை பற்றிக் கவலைகொள்ள வேண்டுமென்று செய்தியாளர் தெரிவித்தார்.

## மனமுடைந்துள்ளனர் கருத்தரங்கின் ஏற்பாட்டாளரும் – விரிவுரையாளரும்

திருக்கோணமலை நகரப் பாடசாலைப் பிள்ளைகளின் சிறந்த பெறுபேற்றிற்காக தமது சொந்த முயற்சியில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு இலவசமாக ஏற்பாடு செய்திருந்த இக்கருத்தரங்கில் மாணவர்கள் நடந்துகொண்ட விதத்தினால் தாம் பெரும் மனக்கிலேசம் அடைந்துள்ளதாக அக்கருத்தரங்கின் ஏற்பாட்டாளரும், விரிவுரையாளரும் மலைமுரசிற்குத் தெரிவித்தனர். இச் சமூக விரோத செயற்பாட்டால் தாம் இனி இவ்வாறான கல்வி உதவிச் செயற்பாடுகளில் ஈடுபட விருப்பமற்றிருப்பதாகவும் எனினும் ஒரு சில மாணவர்களின் செயற்பாட்டால் ஒட்டுமொத்த மாணவ மாணவியரின் எதிர்காலத்தைத் தாம் சிந்திப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## பாதைப் புனரமைப்பு

கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் திரு ஜனார்த்தனன் அவர்களால் திருகோணமலையிலுள்ள கேணியடிப் பிரதேசத்தின் நாகதம்பிரான் வீதி புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு செப்பனிடப்பட்டது. இவ் வீதியானது குன்றும், குழியுமாக காணப்பட்டதுடன் மழைக் காலங்களில் நீர்தேங்கி நிற்பதுடன் இதனால் பொதுமக்கள் இவ்வீதி யினை பாவிப்பது சிரமமாக இருந்ததுடன் சில தொற்று நோய்களுக்கும் உள்ளாகியிருந்தனர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

புனரமைப்புக்கு முன்



புனரமைப்புக்கு பின்






## மத்தள விமான நிலையம் பலிகொண்ட முதல் மனிதர்

மத்தள விமான நிலையக் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருந்த 40 வயதான ரஞ்சித் என்பவர் மின் தாக்குதலுக்கு உள்ளாகிப் பலியாகியுள்ளார்.

குழியொன்றிலிருந்து நீரை பம்பி மூலம் இறைக்க முற்பட்ட வேளையில் ஏற்பட்ட மின் கோளாரினால் இவர் பலியாகியுள்ளார் என காவல்துறை விசாரணைகளின் ஆரம்பக் கட்டத்தில் தெரிய வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அடுத்தமாதம் உலகம் அழியாது - விஞ்ஞானிகள்

அடுத்த மாதம் உலகம் அழியும் என பரவலாக பரிமாறப்பட்ட இலத்திரனியல் அஞ்சல் ஒரு வதந்தியே என இலங்கையிலுள்ள உலகப் புகழ்பெற்ற ஆர்தர் சி கிளார்க் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வகை நிகழ்வொன்றைச் சிலவேளைகளில் இன்னும் 4500 வருடங்களின் பின்னரே எதிர்பார்க்க முடியும் என தெரிவித்த அவர்கள் இலங்கையிலுள்ள சிலர் தமது சொத்துக்களை விற்றுத் தள்ளிவிட்டு வெளிநாடுகளுக்குப் பயணமாகும் மடத்தனமான வேலைகளை உலகம் அழியப் போகின்றது என்னும் எண்ணத்தில் செய்கின்றார்கள் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். மேலும் அமெரிக்க நாசா வெளியிட்ட அறிக்கைகளின் படி மாயன் நாட்காட்டியை எழுதாமல் விட்டுவிட்டார் என்பதும் நப்று என்னும் வேற்றுக்கிரகம் பூமியில் மோதியழிக்கும் என்பதும் கட்டுக்கதைகளே என தெரிவித்துள்ளது. ஆகவே குழந்தைகளே உலகம் அழியுமா என யோசிக்காமல் நாம் வழமைபோல் விளையாடப் போகலாம்

(மாயன்)

## மதி கெட்ட பாம்பு



ஊருக்கு ஒதுக்குப் புறமாக ஒரு கொடிய விசமுள்ள பாம்பு வாழ்ந்து வந்தது. ஊர் மக்கள் யாராவது அதன் புற்றின் பக்கம் போனால் போதும் சீறி வந்து கொத்தி விடும்.

பாம்புப் புற்று இருந்த பாதை அந்த ஊருக்கும் பக்கத்து சந்தைக்கும் உள்ள குறுக்கு வழி. பாம்புக்கு பயந்து ஊர் மக்கள் பல தொலைவு சுற்றி அந்த சந்தைக்குப் போய் வந்து கொண்டிருந்தார்கள். வேறு வழியில்லாததால் சலிப்புடனேயே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தனர்.

ஒரு நாள் அந்த ஊருக்கு ஒரு யோகி வந்தார். அவர் மிருகங்களிடம் பேசக் கூடிய வரம் பெற்றவர். ஊர் மக்கள் தங்கள்குறையை அவரிடம் முறையிட்டனர். அவர் பாம்பிடம் பேசி அதற்கு ஊர் மக்களை கடிக்கக் கூடாது என்று கட்டளை இட்டு விட்டு பக்கத்து ஊருக்குச் சென்று விட்டார்.


பாம்பும் அவர் கட்டளைக்குக் கட்டுப் பட்டு நடந்தது. ஆனால் ஊர் மக்கள் சும்மாயில்லை. அந்த வழியே போகும் சிறுவனுக்குக் கூட பாம்பிடம் இருந்த பயம் போய் விட்டது.

பாம்பைக் கண்டால் அதைக் கல்லால் அடிப்பது, துன்புறுத்துவது, விரட்டியடிப்பது என்று அதன் வாழ்க்கையை நிம்மதியில்லாமல் செய்து கொண்டிருந்தனர். உடம்பில் பல காயங்களுடன்குற்றுயிரும்குலையுயிருமாகி சாகும் நிலைக்கு வந்து விட்டது பாம்பு.

யோகி ஒரு நாள் பாம்புப் புற்று இருந்த வழியாக ஊருக்குள் திரும்ப வரும் போது பாம்பின் பரிதாபமான நிலையைக் கண்டு அதனை விசாரித்தார். பாம்பும் நடந்த கதையையெல்லாம் கூறி அழுதது. யோகி பாம்பைப் பார்த்து... அட முட்டாள் பாம்பே.... உன்னை மக்களைக் கடிக்கவேண்டாம் என்றுதானே கூறிச் சென்றேன். பக்கத்தில் வருபவனைப் பார்த்து சீறாதே என்று ஒரு போதும் சொல்லவில்லையே.....என்று கேட்டார்.

பாம்பு தன் மதியீனத்தை எண்ணி வெட்கித் தலை சீறியது. இதற்குப் பின் பாம்பும் பிழைத்துக் கொண்டது

(பா.சுதர்சன்)




## பேரீச்சம்பழக் கேக்



**தேவையான பொருட்கள் :**
பட்டர் - 500 கிராம், சீனி - 500 கிராம், றவை - 500 கிராம், முட்டை - 8, பேரீச்சம்பழம் - 1 கிலோ, பேக்கிங் பவுடர் - 4 தே.க, வனிலா - 2 தே.க, முந்திரி வற்றல் - 100 கிராம், தேயிலைச் சாயம் (தடிப்பானது) - 2 கப்

**செய்முறை :** பேரீச்சம் பழத்தைக் கழுவி விதை நீக்கி மிகச் சிறு துண்டுகளாக வெட்டி பாத்திரத்தில் இடவும். பின்னர் தடிப்பான தேயிலைச் சாயத்தை விட்டு 7-8 மணி நேரம் ஊறவைக்கவும். பின்னர் பட்டரையும் சீனியையும் சேர்த்து நன்கு அடிக்கவும். அடிக்கும் போது இடையிடையே முட்டையை ஒவ்வொன்றாகச் சேர்த்து அடிக்கவும். றவையுடன் பேக்கிங் பவுடரைச் சேர்த்துக் கலவைக்குள் சேர்க்கவும் பின் ஊறவைத்த பேரீச்சம்பழம், முந்திரி வற்றல், வனிலா இவற்றைச் சேர்த்து நன்கு கலக்கிய பின் பேக் பண்ணிக் கொள்ளவும்.
இச்சுவையான பேரீச்சம் பழக் கேக்கை சிதையாத துண்டுகளாக வெட்டி எடுக்கவும்.



## பெண்கள் மழைக்காலத்தில் தங்கள் உடலை பராமரிப்பது எப்படி ?

மழை பெய்யும் காலங்களில் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை தலைக்கு குளித்தால் நல்லது. அளவான சூட்டில் உள்ள வெந்நீரில் குளித்தால் தோலின் நிறம் மாறாமல் இருக்கும்.

குளிப்பதற்கு முன்பு உடல் முழுவதும் தேங்காய் எண்ணையை தடவிக் கொள்ளவும். அதேபோல் முழங்காலில் இருந்து பாதம் வரை தேவையற்ற முடிகளை அகற்றும் பசை தடவி மசாஜ் செய்து கொண்டால் மழைநாட்களில் இந்த இடங்களில் தொற்றுக் கிருமிகளின் தாக்குதல் இருக்காது. தினமும் இரவு படுக்கப்போகும் முன்பு ஒரு சிறிது வெந்நீரை ஊற்றி. அதில் உங்கள் பாதங்களை 5 நிமிடங்கள் ஊற வைத்து கைவிரல்களால் மசாஜ் செய்யுங்கள்.

இப்படிச் செய்வதால் உடல் முழுவதும் உள்ள இறுக்கம் விடுபட்டது போல் இருக்கும். வெளியில் சென்றுவிட்டு வீட்டுக்கு வரும்போது சுத்தமான தண்ணீரால் கால்களை நன்கு கழுவி, சுத்தமான துணியால் ஈரத்தை துடையுங்கள். குளிக்கும் நீரில் ஒரு கைப்பிடி அளவு வேப்பிலை போட்டு வைத்திருந்து. சிறிது நேரம் கழித்துக் குளிக்கலாம். கடும் மழை நாட்களில் தவறாமல் மஞ்சள் தேய்த்துக் குளிக்க வேண்டும். ஏனெனில், கிருமிநாசினியான மஞ்சள் சருமத்தைப் பாதுகாக்கும். ஈரமான துணிகளை அணிந்து கொள்வதால் தோல் எரிச்சல், தொற்றுக்கிருமி பாதிப்பு போன்றவை ஏற்படலாம். எனவே, ஈரத்துணியைக் கழற்றியவுடன் அந்த இடத்தில் தேங்காய் எண்ணை தேய்த்து சிறிது நேரம் கழித்து கழுவி விடலாம். மழைக்காலத்தில் மருதாணி போட்டுக்கொள்வதை தவிர்ப்பது நல்லது. மருதாணி குளிர்ச்சி என்பதால் சளி பிடித்துவிட வாய்ப்புண்டு.

## அமிர்தமாகும் தாய்ப்பால்

பிரசவம் என்ற முக்கிய கட்டத்தை தாண்டிய பின் அடுத்த முக்கியமான விடயம் தாய் பால்.

தாயின் அன்பும், குழந்தைக்குத் தேவையான சத்தும் செறிந்திருக்கும் தாய்பாலுக்கு இணை வேறு ஒன்றுமில்லை.

குறிப்பாக குழந்தை பிறந்த பிறகு சுரக்கும் அந்த முதல் பால் குழந்தைக்குத் தாய் தரும் பொக்கிசம் என்று கூட சொல்லலாம்.

வெளிர் மஞ்சள் நிறத்தில் நீர்போல் சுரக்கும் அந்த முதல் பாலை, ஆங்கிலத்தில் கொலாஸ்ட்ரம்" என்பார்கள், தமிழில் சீம்பால் என்பார்கள். சுகப்பிரசவமாக இருந்தால் குழந்தை பிறந்த அரை மணி நேரத்திலும், சத்திர சிகிச்சை மூலமாக பிரசவம் நடந்தால் ஒரு மணி நேரத்தில் குழந்தைக்கு பால் கொடுக்க முடியும்.

தாய் பால் ஆரம்பத்திலேயே அதிகமாக சுரந்துவிடாது. குழந்தையின் தேவையை அறிந்து சிறிது சிறிதாகதான் சுரக்கும் அப்படி குழந்தையின் தேவையை அறியும் தாயின் உடல் தகவலமைப்பு மிக சுவரஸ்யமானது.

குழந்தைக்கு தாய்பால் கொடுக்கும் போது பிள்ளைக்கு பால் போதுமானதாயில்லை எனும் தாயின் உணர்வு மூளைக்கு கடத்த படும். மூளை அந்த செய்தியை ஏற்று தாய் பாலின் அளவை அதிகரிக்கும் ஹார்மோன் சுரப்பிகளை தூண்டும். அதாவது கேள்வியை பொறுத்துதான் விநியோகம் அதிகமாகும் என்றும் சொல்லலாம் பொதுவாக இந்த சமயத்தில் பெண்களின் கவலை குழந்தைக்கு பால் போதுமா இல்லையா என்பதிலேயே கவனமாக இருக்கும் அத்துடன் குழந்தை எப்போதுமே நித்திரை கொள்வதால் கொடுக்கும் பாலின் அளவு போதுமா எனும் கவலை இருந்துகொண்டே இருக்கும். பொதுவாகப் பிறந்த குழந்தைக்கு இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை பால் கொடுத்தாலே போதும் குழந்தை மிக ஆரோக்கியமாக இருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## Sunday Observer:

### சுற்றுலாப் பயணிகளைப் பாதுகாக்க புதிய நடத்தை விதிகள்

வேண்டத்தகாத விளைவுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகளைக் காப்பதற்கான புதிய நடத்தை விதிகளும் ஒழுங்குகளும் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன. நாட்டின் நற்பெயரைக் காத்துக் கொள்வதற்காக முச்சக்கர வண்டி சாரதிகளுக்கும், சுற்றுலாத் துறையுடன் தொடர்புடையவர்களுக்கும் சுற்றுலா காவல் துறையும், இலங்கைச் சுற்றுலா அதிகார சபையும் இணைந்து அறிவுறுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன. அதற்கு மேல் சுற்றுலாப் பயணிகளை துன்புறுத்துவோருக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வழிவகைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பெருமளவு துன்புறுத்தும் நடவடிக்கைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக காவல் துறை அறிவித்துள்ளது.

அத்துடன் தொடருந்து நிலையங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கான விசேட நிலையங்களைத் திறப்பதற்கும் சிந்திக்கப்பட்டுள்ளது.

### நாடாளுமன்ற உறுப்பினர்களை எச்சரித்தார் சபாநாயகர்.

பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் விடயத்துடன் தொடர்பில்லாத விடயங்களை கதைத்துக் கூச்சலிட்டு விவாதத்தைக் குழப்பும் நாடாளுமன்ற உறுப்பினர்களை வெளியகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சபாநாயகர் அறிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களை மதிப்புடன் நடந்துகொள்ளுமாறும் சபாநாயகர் மேலும் எச்சரித்துள்ளார்.

### ஏற்றுமதி நிறுவன முகாமையாளரின் கொலை தொடர்பில் சந்தேக நபர் கைது

கடந்த வாரத்தில் தனது காரிலேயே கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுக் கிடந்த ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களைக் கையாளும் வர்த்தக கம்பனியின் முகாமையாளரான விஜித். ம. கொஸ்டா வின் கொலை தொடர்பான சந்தேக நபர் ஒருவர் 23.11.2012ல் கைது செய்யப்பட்டுள்ளார். கொட்டாஞ்சேனை சவக்காலையில் இருந்து கழுத்தை அறுக்க பயன்படுத்தப்பட்ட கத்தியையும் காவல்துறை கைப்பற்றியுள்ளது. சந்தேக நபர் கொள்ளுப்பிட்டியில் துணிவியாபார முகவராக செயற்பட்டுள்ளார்.

கொலைச் சந்தேகரின் கூற்றுப்படி கொல்லப்பட்ட முகாமையாளர் கொலையாளியின் மகனை தகாத பாலியல் உறவுக்கு கடுமையாக வற்புறுத்தியிருந்ததாக தெரியவருகின்றது. அதனால் ஆத்திரமுற்ற கொலையாளி முகாமையாளரைக் கொலை செய்துள்ளார்.

சம்பவ தினம் கொலையாளியின் மகனும், கொலையாளியும் கொள்ளுப்பிட்டியின் 5ம் ஒழுங்கையில் நடந்து சென்ற போது முகாமையாளர் தனது காரில் அவர்களைக் கண்டு ஏற்றிச் சென்றுள்ளார். கொலையாளிக்கும் முகாமையாளருக்கும் சிறிது காலப் பழக்கம் இருந்துள்ளது. காரினுள் இருவருக்கும் கடும் வாய்த்தர்க்கம் நிகழ்ந்ததாகவும் அதன் பின்னரே முகாமையாளர் கத்தியால் வெட்டப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

## The Sunday Leader

### கொழும்பு கோட்டையின் மாநகர முதல்வர் இரகசியங்களை வெளியிட தயாராகின்றார்.

கோட்டை பிரதேசத்தின் போதை மருந்துக் கடத்தலில் ஈடுபடும் முகவர்களையும் அதற்கு ஆதரவளிக்கும் காவல்துறையினரதும் பெயர்களை வெளியிடுமாறு கோட்டை மேயர் ஜானக ரணவக்க பயமுறுத்தப்பட்டுள்ளார். இவ்வாரத்தில் இந்தியாவில் இருந்து திரும்பி வரும் இவர் இவ்விடயங்களை வெளியிடுவதற்கு தயாராயுள்ளார் என Sunday Leader க்கு தெரிவித்துள்ளார்.

"தனது உயிர், ஆபத்தை எதிர்நோக்கியிருந்தாலும் கூட இவ்வாரத்தில் தான் கூட்டவுள்ள பத்திரிகையாளர் சந்திப்பில் இவ்விடயங்களை வெளிக்கொணர தயாராயிருப்பதாக" அவர் மேலும் தெரிவித்தார். காவல் துறையினருக்கும் போதைக்

**The Sunday Leader ன் தொடர்ச்சி**

கடத்தல் காரர்களுக்கும் தொடர்பிருப்பதாக அவர் தெரிவித்ததுடன் அவருக்கு கொலைமிரட்டல்கள் விடுக்கப்பட்டதை காவல் மா அதிபருக்கு மேயர் தெரியப்படுத்தியிருந்தார். அதற்கு காவல் மா அதிபர் "இலங்கையின் எந்த மேயருக்கும் காவல்துறைப் பாதுகாப்பு வழங்கப்படவில்லை'' எனப் பதிலளித்துள்ளார்.

கடந்த வாரத்தில் மேயர் ஊடகங்களுக்கு இவ்விடயத்தைத் தெளிவுபடுத்திய பின் காவல்துறையினர் அவரை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். இதைத்தொடர்ந்து காவல்துறை ஊடகப்பேச்சாளர் மேயரின் இக்கூற்றானது காவல்துறையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதாகவும் அதனால் வெலிக்கடைப் பிரதேசத்தில் நிலவும் அமைதியை சீர்குலைக்கும் ஆபத்தைக் கொண்டிருப்பதாகவும் கூறினர்.

### என்னை எவரும் தொடர்பு கொள்ளவில்லை – மொஹான் பீரிஸ்

தற்போதைய பிரதம நீதியரசர் பதவி நீக்கம் செய்யப்பட்டால் அப்பதவியை பெற்றுக்கொள்ளுமாறு தன்னை யாரும் கேட்கவில்லை என முன்னாள் அட்டோனி ஜெனரல் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார். சனாதிபதியின் ஆலோசகராகவுள்ள மொஹான் பீரிஸ் அப்பதவிக்கு நியமனம் செய்யப்படும் சாத்தியமுள்ளதாக ஊடகங்களில் அறிக்கைகள் வெளியாகியுள்ளன.

"அவை பொய்யானவை. அவ்வாறு என்னை யாரும் கேட்கவில்லை" என மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார். அத்துடன் அவ்வாறு யாராவது உங்களைக் கேட்டால் அப்பதவிக்கு நீங்கள் பொருத்தமானவர் தானா என கேட்கப்பட்ட கேள்விக்கு "அதனை நான் தீர்மானிக்க முடியாது" என அவர் மேலும் தெரிவித்தார்.

### நல்லுறவு சீர்குலையும் – எதிர்க்கட்சி எச்சரிக்கை

மீயுயர் நீதிமன்றத்தின் வேண்டுகோளை நிராகரிப்பதால் அரசியலமைப்புக்கும் சட்டத்துறைக்குமிடையிலான உறவு மேலும் சீர்குலைய வாய்ப்புள்ளதாக எதிர்க்கட்சி எச்சரித்துள்ளது. மீயுயர் நீதிமன்றமானது பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை தொடர்பான செவிமடுப்பை பின்போடுமாறு பாராளுமன்றத்தைக் கோரியிருந்தது.

எனினும் பாராளுமன்றம் அதனை நிராகரித்தமையானது இவ்விரு துறைகளுக்கு மிடையிலான நல்லுறவைப் பாதிக்கும் என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அக்கோரிக்கையை பாராளுமன்றம் சிறிது சிந்தித்துப் பார்த்திருக்க வேண்டும் எனக் கூறிய அவர் அவ்வாறு சிந்தித்துப் பார்க்காமல் அதனை நிராகரித்தமையானது நல்லதல்ல என்றும் தெரிவித்துள்ளார். அரசியலமைப்புச் சட்டத்தின்படி குற்றப்பிரேரணைகளை அரசியற் பலிவாங்கல்களுக்காக பாவிப்பது நல்லதல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.

### மேல் மாகாண பேரூந்துகளின் சேவைப் புறக்கணிப்புத் திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் இயங்கும் அனைத்து தனியார், பேருந்துகளும் திட்டமிட்டிருந்த பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. மேல் மாகாண சபையால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள போக்குவரத்து குறிப்புப் புத்தகங்கள், பேருந்து அனுமதிப் பத்திரங்கள், பேருந்து உரிமை மாற்றம் தொடர்பான புதிய கட்டண வீதங்களை எதிர்த்து இப்பணிப்புறக்கணிப்பு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் மேல் மாகாண சபை, போக்குவரத்து அமைச்சுடனான பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட உடன்படிக்கைக்கமைய இவ்வொரு நாள் பணிப்புறக்கணிப்பு பின்தள்ளப்பட்டுள்ளது.

## The Sunday Times:

### மசகெண்ணெய்க் கொடுப்பனவை ஈரானுக்குச் செலுத்த புதிய வழிகள்

ஈரானுக்குச் செலுத்த வேண்டிய 2 பில்லியன் ரூபாய் மசகெண்ணெய்க் கொடுப்பனவை செலுத்துவது தொடர்பான சிக்கலை இலங்கை, இதுவரை இருந்தது. இருநாடுகளும் இவ்விவகாரத்தை தற்போது சுமூகமாக தீர்த்து வைத்துள்ளன.

**The Sunday Times ன் தொடர்ச்சி**

உமா ஓயா நீர்ப்பாசன திட்டத்திற்கு ஈரான் வழங்கவுள்ள நிதியின் ஒரு பகுதியாக இந்த 2 பில்லியன் ரூபாவை மாற்றுவதற்கு இருநாடுகளும் இணங்கியுள்ளன என நீர்ப்பாசன நீர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

உமா ஓயா திட்டத்திற்கு 529 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என திட்ட மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இத்தொகையில் 450 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க ஈரான் ஏற்கனவே முன்வந்திருந்தது. எஞ்சிய மதிப்பீட்டுத் தொகையினை இலங்கை அரசு முதலீடு செய்யத் திட்டமிட்டிருந்தது. அத்திட்டத்தின் கீழ் வெலிமட மற்றும் டையபா ஆகிய இரு இடங்களில் உமா ஓயாவின் குறுக்காக அணைகள் கட்டப்படவும் 134 மெகா வோல்ட் கொள்ளளவைக் கொண்ட மின்வலு உற்பத்தி நிலையமொன்றையும் உருவாக்கும் திட்டமாக இத்திட்டம் காணப்படுகிறது. இத்திட்டத்தின் பிரதான நோக்கம் தென் மாகாணத்திற்கு உமா ஓயாவிலிருந்து நீரைத்திசை திருப்புதல் ஆகும். மொனராகல, பதுளை, அம்பாறை ஆகிய மாவட்டங்களும் இத்திட்டத்தினூடாக நன்மை அடையும். 2008ம் ஆண்டில் இலங்கைக்கு விஜயம் செய்த ஈரானிய சனாதிபதியினால் இத்திட்டம் தொடர்பான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருந்தன.

### மஞ்சள் அட்டை எச்சரிக்கை – இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ளது.

சட்ட விரோதமாக ஏனைய நாடுகளின் கடல் எல்லைக்குள் புகுந்து இலங்கை மீனவர்கள் புகுந்து மீன் பிடிப்பது தொடர்பான முதலாவது எச்சரிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ளது. இலங்கைக்கும் ஏனைய ஏழு நாடுகளுக்கும் இவ் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 11 தடவைகள் ஏனைய நாடுகளின் கடலாதிக்க எல்லைக்குள் இலங்கை மீனவர்கள் சட்ட விரோத மீன்பிடியை மேற்கொண்டிருந்ததை ஐக்கிய ஒன்றியம் சுட்டிக் காட்டியுள்ளது.

ஐக்கிய ஒன்றிய பேச்சாளரின் கூற்றுப்படி இவ் எச்சரிக்கை ஒரு முதற்கண் நடவடிக்கையே ஒழிய இலங்கையை கறுப்புப் பட்டிக்குள் சேர்க்கும் நடவடிக்கை அல்ல. ஐக்கிய ஒன்றியமானது ஏனைய நாடுகளின் கடலாதிக்கத்துள் மேற்கொள்ளப்படும் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கையை ஒரு குற்றவியல் நடவடிக்கையாகவே கருதுகின்றது. இந்நடவடிக்கை அந்தந்த நாடுகளின் மீன்பிடிச் சமூகங்களின் வாழ்வாதாரத்தை பாதிப்பதாகவும் அந்நாடுகளின் மீன் வளத்தை சூறையாடுவதாகவும் ஐக்கிய ஒன்றியம் கருதுகிறது.

ஐக்கிய ஒன்றிய நாடுகளுக்கு இலங்கை மீன்பிடிப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் ஊடாக வருடாந்தம் 22 பில்லியன் ரூபாய்களை வருமானமாக பெறுவது குறிப்பிடத்தக்கது. இப்பட்டியலில் பெலிஸ், கம்போடியா, பிஜி, கியூனியா, பனமா, டோகோ மற்றும் வனாத்து ஆகிய நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ள போதும் இலங்கைக் கடற்பரப்பில் பெரும் அத்துமீறல்களை மேற்கொள்ளும் இந்தியா இப்பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை.

### சட்டவாளர் சங்கம் பாராளுமன்ற தெரிவுக் குழுவை நெருக்குகிறது.

இலங்கைச் சட்டவாளர் சங்கம் பிரதமநீதியரசருக்கெதிரான குற்றப்பிரேரணையை விசாரிக்க உருவாக்கியுள்ள பாராளுமன்ற தெரிவுக் குழுவின் அமர்வுகளை இருமாதங்களுக்கு பின்போடுமாறு நெருக்குதல் ஒன்றைக் கொடுத்துள்ளது. இந்நெருக்குதல் மீயுயர் நீதிமன்றத்தினால் பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளினை அடியொற்றி உருவாகியுள்ளது.

### அராபிய குழந்தையை காப்பாற்ற முயன்று மரணமான பெண்ணின் சடலம் இன்னமும் வந்து சேரவில்லை.

குழந்தையொன்றைக் காப்பாற்ற முனைந்து மரணமான 20 வயதான லக்மாளி பிரியங்காவின் உடலம் இன்னமும் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து எடுத்துவரப்படவில்லை. இம்மாத ஆரம்பத்தில் மரணமான இப்பெண் நீர்கொழும்பின் கட்டுனாபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர். உல்லாச விடுதியொன்றின் நீர்த்தடாகத்தின் ஆழமான பகுதியில் விழுந்த அராபியக் குழந்தையொன்றைக் காப்பாற்ற முனைந்த போதே இவரும் இவருடன் பணியாற்றிய சோமாலியாவைச் சேர்ந்த இளம் பெண்ணும் மரணமாகியிருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் விளையாட்டு செய்திகள்

## கராத்தே பிரவீணன் - ஹட்ரிக் சாதனை

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் 11ம் தரத்தில் கல்வி பயிலும் மாணவன் ர.பிரவீனன் கராத்தேயில் சாதனை படைத்துள்ளார். தனது 3வது வயதில் கராத்தே கலையைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்த இவர் ITOSUKAI யின் 22வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடாத்தப்பட்ட தேசிய கராத்தே சம்பியன்சிப் போட்டியில் மூன்று பிரிவுகளில் முதலிடத்தை பிடித்து சாதனை படைத்தார்.

தனிநபர் காட்டா பிரிவு, தனிநபர் குமித்தே பிரிவு மற்றும் குழு குமித்தே பிரிவில் முதலாமிடத்தைப் பிடித்து மூன்று தங்கப் பதக்கங்களை பெற்று வெற்றிவாகை சூடினார். இவர் திருகோணமலையின் ரகு மற்றும் கௌரிகௌசலா ஆகியோரின் புதல்வன் ஆவார். சிறுவயது முதலே சிறப்பாகப் பயிற்சி வழங்கி இவர் இலக்கை எட்டக் காரணமாக இருந்தவர் இவரின் கராத்தே பயிற்றுவிப்பாளர் திரு. ஆர். சத்தியேந்திரன் என்பது குறிப்பிடத் தக்கது. மலைமுரசுக் குழுமம் சார்பாக திருகோணமலையின் இளம் புருஸ் லீ பிரவீனனுக்கு எமது பாராட்டுக்கள்.




## திருக்கோணமலை கிங்கோ அரிமாக் கழகத்தின் தொடர் கணிதக் கருத்தரங்கு

கணிதப் பாடத்தின் அடைவு மட்டத்தினை உயர்த்துவதற்காக திருகோணமலை கிங்கோ அரிமாக் கழகமானது சிவானந்த தபோவனம், கிறேஸ் இல்லம், அமலஉதய இல்லம் போன்ற இல்லங்களில் வதியும் க.பொ.த சாதாரணதர பரீட்சைக்கு தோற்றப் போகும் மாணவர்களுக்கு இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது. 28.11.2012 புதன்கிழமை பி.ப 3.30மணிக்கு சிவானந்த தபோவன கல்விக் கேட்போர் கூடத்தில் திருகோணமலை கிங்கோ தலைவர் லயன் ந.வசந்தகுமார் தலைமையில் ஆரம்பமானது. இதில் 306C1 சர்வதேச லயன் மாவட்ட ஆளுனர் சபையின் மேலதிக பொருளாளர் லயன் உதயசங்கர், வலயத் தலைவர் லயன் ஜேம்ஸ், குணா கல்வி நிலைய இயக்குனர் திரு செல்வேந்திரன், கணிதப்பாட கருத்துரைப்பாளர் ஆசிரியர் திரு கோபிநாத், இல்லப் பொறுப்பாசிரியை திருமதி சந்திரகாந்தன் போன்றோர் சமூகமளித்தனர்.

லயன் உதயசங்கர் தெரிவிக்கையில் 306C1 சர்வதேச லயன் மாவட்டத்திற்கு திருகோணமலை யிலிருந்து ஒரு தமிழர் முதன் முதலில் தெரிவு செய்யப்பட்டுள்ளார் அவர் லயன் B.ஜனரஞ்சன் அவர் மூலமான பாரிய செயற்திட்டங்கள் எமது மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றன எனக் குறிப்பிட்டார்.

கழகத் தலைவர் லயன் வசந்தகுமார் தமது அறிமுக உரையில் இக் கருத்தரங்கானது எமது மாவட்ட ஆளுனர் லயன் B.ஜனரஞ்சனின் குறிக்கோள்களில் ஒன்றான தொடர் கல்விச் செயற்பாடு என்பதற்கேற்ப அடைவு மட்டங்களை விளக்கிக் கொள்ளும் வகையில் தெரிவு செய்யப்பட்ட இல்லங்களில் உள்ள எமது உறவுச்சிறார்கள் பயனடை வதற்காக ஒழுங்குபடுத்தப்பட்டது எனக் குறிப்பிட்டார். இக் கருத்தரங்கு தொடர்ந்து கணிதபாட பிரபல்ய குழாத்தினரால் திரு.கோபிநாத், திரு.செந்தூரன், திரு.ஜோன்கெனடி, திரு.சிவகாந்தன் ஆகியோரால் நடாத்தப்படும்.





## கணனிப் பயிற்சி முடித்து வெளியேறினர்

### தம்பலகமம் ஆதிகோணேஸ்வரா மாணவர்கள்

தம்பலகமம் ஆதிகோணேஸ்வரா மகா வித்தியாலத்தின் கணினி பிரிவினால் நடாத்தப்பட்ட கணினி கற்கைகளை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது .இந்நிகழ்வில் கலந்து கொண்ட திருமலை வலய கல்விப்பணிப்பாளர் திரு ந.விஜேந்திரன் சான்றிதழ்களை வழங்குவதனையும் அருகில் தகவல் தெழில்நுட்பப் பாட ஆசிரியர் திரு.ந.உமாசங்கர் நிற்பதனையும் சான்றிதழ் பெற்றுக்கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்









துப்பாக்கி படம் பற்றி பேசும் போது Sleeper Cell என்று கூறுவதைக் கேட்டு இருப்பீர்கள், பலர் படம் பார்த்தும் சிறிது குழப்பத்துடன் இருந்து இருக்கலாம்.

Sleeper Cell என்பது தீவிரவாதிகள் இளைஞர்களை (சமூக கோபம் அல்லது வெறுப்பில் உள்ளவர்கள்) மூளைச் சலவை செய்து, தீவிரவாத பயிற்சி கொடுத்து அனுப்பி விடுவார்கள். இவர்கள் மக்களோடு மக்களாக கலந்து சாதாரண மக்களாக இருப்பார்கள்.

இவர்களுக்கு கட்டளை கொடுப்பார்கள், இந்த இடத்தில் குண்டு வைக்க வேண்டும் / இவரைக் கொல்ல வேண்டும் என்று, கட்டளை வரும் அதை நிறைவேற்றுவார்கள். யார் கட்டளை கொடுக்கிறார்கள் என்பதும் இவர்களுக்குத் தெரியாது. இவர்கள் மாட்டினாலும் யாரையும் காட்டிக் கொடுக்கவும் முடியாது காரணம், கட்டளை இடுவது யார் என்று இவர்களுக்கே தெரியாது. இது போல இருக்கும் Sleeper Cell பற்றி மற்ற Sleeper Cell களுக்கும் தெரியாது. இவர்களை உருவாக்கிய தலைகளை கொன்று விட்டால் அவர்களிடம் இருந்து எந்தக் கட்டளையும் வராமல் காலம் முழுக்க காத்திருக்க வேண்டியது தான். இல்லை என்றால் புது தீவிரவாதக் குழுவில் சேர வேண்டும்.

## நிறம் மாறும்

### பயணிகள் பேருந்துகள்



15.11.2012ல் நடாந்த மந்திரிகள் சபைக் கூட்டத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் குமார வெல்கமவினால் பயணிகள் போக்குவரத்துப் பேருந்துகளின் வர்ணப்பூச்சை சீரான நிறங்களுக்கு மாற்றுவது தொடர்பாக பிரேரணையொன்று முன்வைக்கப் பட்டது. அப்பிரேரணையை ஏற்றுக் கொண்ட மந்திரி சபை பின்வருமாறு பயணிகள் பேருந்தின் வர்ணப் பூச்சுக்களை மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

பயணிகள் பேருந்து :

தனியார் - இளநீலநிறம்

போக்குவரத்துச் சபை - சிவப்பு

பள்ளிப் பேருந்துகள் - மஞ்சள்

இந்நிற மாற்றமானது 01.01.2014ம் ஆண்டிற்குள் அனைத்து மேற்கூறப்பட்ட வாகனங்களுக்கும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் மந்திரி சபை தீர்மானித்துள்ளது.

## "நீங்களும் எழுதலாம்" வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் பௌர்ணமி தின கவியரங்கு பிற்போடப்பட்டது

27.11.2012 அன்று செவ்வாய்க் கிழமை மாலை 4.00 மணிக்கு " எத்தனை தான் அச்சங்கள்" என்னும் தலைப்பில் நிகழவிருந்த கவியரங்கம் மாவீரர் நாள் அச்சம் காரணமாக வெளியக அழுத்தங்களால் பிற்போடப்பட்டுள்ளது. இந்நிகழ்வு இன்று 02.12.2012 அன்று திட்டமிட்டபடி நகரத்தின் மத்திய வீதியில் உள்ள புனித சவேரியர் மகாவித்தியா லயத்தின் மண்டபத்தில் நடைபெற வுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறியத்தந்துள்ளனர். அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர்.



அகவை மூன்றை நோக்கி
சயன்ஸ் அக்கடமி
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
தரம் 6 தொடக்கம் 12 வரை
05.12.2012ற்கு முன்
அனுமதிகளைப் பெற்றுக்
கொள்ளுங்கள் - 026 222 1807
கந்தசாமி கோவில் வீதி 1ம் ஒழுங்கை

மலைமுரசு பத்திரிகையின் அலுவலக வினியோகத்தர்கள் - திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 02 12. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.